16 116

Registered M—1390.

A Tamil Law Journal

KNOWN AS

தென் இந்திய வியவகார சிந்தாமணி.

Vol-IV] MARCH—1920 [No. 9

PUBLISHED BY

S. T. PALDANO.

N. Subramania Aiyar—(*Editor & Manager.*)

All rights reserved.

PRINTED AT
The N. M. S. Press,
MADRAS.

1920-பிப்ரவரி சஞ்சிகையின்

பொருளடக்கம்.

I. ஹைகோர்ட் அப்பீல் தரப்பின் ரூல் 42-ன்படி ஆஜர் மிமோ தாகல் செய்ய நோடீஸ்கிடைத்தமுதல் 25 நாள் வாய்தாவுண்டு. அதற்குள் அப்பீலில் மிமோவைத் திருத்த அநுமதி கொடுத்த உத்தரவை அப்பீல் நோடீஸ் பெற்று ஆஜர் மிமோ தாகல் செய்யலாயக்குள்ள எதிரி தனக்குத்திருத்தல் மனு நோடீஸ் கிடைக்கவில்லையென்றகாரணத்தால் ரத்து செய்யக்கோறலாம். 137

II. பாரதீனமாகி யிருக்கிற குடும்பசொத்தை யாதொரு தொகை செலுத்தி வசப்படுத்திக் கொள்ளும் பொருட்டு டிக்கிரீயில் வாய்தா குறிப்பிட்டும் தவறினால் என்ன வகையென்று காணப்படாத பட்சத்தில் ஸி. பி. ஸி. ஆர்டர் 34- ரூல் 8-ன் கருத்தில் கோர்ட்டார் தொகை செலுத்தும் வாய்தாவை அதிகரிக்கலாம். 138

III. கோமட்டி செட்டிகளின் குடும்ப வர்த்தகத்திற்காக வென்று வாங்கபட்டிருந்தகடனுக்காக அவிபக்தர்களான மைனர் மெம்பர்கள் தங்களுக்கு ஷை வர்த்தகத்தில் யாதொரு சம்மந்தமும் கிடையாதென்றும் மேஜர் மெம்பரிடம் வர்த்தகத்தை ஒப்புவித்துத் தாங்கள் விலகிக் கொண்டாரென்ற நியாயத்தை மதியாமல் மைனர் மெம்பர்களின் குடும்ப சொத்து பாகத்தைப் பொருத்தும் டிக்கிரியளிக்கத் தகுமென்று தீர்மானிக்கப்பட்டது. ... 140

IV. மைனருக்கு கார்டியன் நியமன விஷயமாய் இரண்டு ஜாமீன்தார்களை ஏற்படுத்த ஒரு வக்கீலின்யோஜனைபடி ஜாமீன்தார்களுக்கு மைனரின் சொத்து வருமானத்தில் யாதொருபாகத்தைப் பிரதி பிரயோஜனமாய்க் கொடுப்பதாய் கார்டியன் கோர்டாருடைய தகவல்லின்றியில் ஜாமீன்தாருடன் உடன்படிக்கை செய்ததற்காக யோஜனை சொன்ன வக்கீலின் மீது யாதொரு தப்பிதமும் சொல்லக் கூடாதென்பது. 141

V. காலாவதி ஆக்டு 166-181-வது ஆர்டிகில்களைப் பிரயோகித்து ஏலத்தை ரத்து செய்ய விண்ணப்பங் கொடுக்கவேண்டிய சந்தர்ப்பங்கள் இந்த அப்பீல் தீர்மானத்தில் சொல்லியிருக்கிறது. 143

VI. வாரண்டில் பிடிபட்ட கடனாளிக்காக சொத்து ஜாமீன் கொடுத்தவர் ஜாமீனிலிருந்த சொத்தை நிவர்த்தி செய்யும் பொருட்டு டிக்லேரேஷன் தாவாசெய்ய ஸி. பி. ஸி. 47-வது பிரிவு தடையாகாது. நிறைவேற்றும் நடவடிக்கை சம்மந்தமாய் சில்லரை மனுக் கொடுக்க லாயக்கில்லை. 145

VII. கடனைத் தீர்க்க 6-மாத வாய்தா வேண்டுமென்று பாங்கியாருக்கு விண்ணப்பம் கொடுத்ததை ஒப்புக்கொண்டமுதல் ஷை வாய்தா முடிந்தபிறகு தான் பிராமிஸரி நோட்டுக்குக் காலாவதி தொடங்குவதாய் ஆர்டிகில் 69 அல்லது 80-ஐப்பிரயோகித்துத் தீர்மானிக்கப்பட்டது. 73-வது ஆர்டிகில் உதவாதென்று சொல்லப்பட்டது. 147

VIII. மைனருக்காக கார்டியன் செய்துகொண்ட 'விக்கிரய' உடன்படிக்கையை பற்றி மைனர் மேஜரானபிறகு கார்டியனுடன் எதிரி செய்துகொள்ளும் உடன்படிக்கையை நிறைவேற்றத் தகாதென்ற மைனரின் மீது எதிரி நிறைவேற்றத் தகாத வண்ணமாகவே தீர்மானம். 152

IX. Crl P. C. 145-வது பிரிவின்படி சொத்தின் தற்கால சுவாதீனத்தைப்பற்றி நிர்ணயிக்கும் பொருட்டு மாஜிஸ்டிரேட்டார் ஸ்தலப் பரிசோதனையில் தன்னுடைய சொந்த அபிப்பிராயத்தைக் கொண்டும் சாட்சி விஜாரணை செய்யமறுத்தும் செய்த உத்தரவை ரத்துசெய்து வேறு மாஜிஸ்டிரேட்டார் விஜாரணை செய்யவேணுமாய்த் தீர்மானிக்கப்பட்டது. 149

தென் இந்திய வியவகார சிந்தாமணி.

Vol. IV.] மார்ச்சு—1920. [9-ம் பிரதி.

மதராஸ் ஹைகோர்ட் தீர்மானங்கள்

சீவ் ஜஸ்டிஸ் & சதாசிவய்யர்-J

(குண்டூர் ஜில்லா)

R. S. 230 of 1918-6 நவம்பர் 1919

R. P ஜில்தரை VS லிங்கமல்லு வரதராகவய்யா.

R. P. ஜில்தரை என்ற வாதிக்காக வக்கீல் மிஸ்டர். G. V. ஸ்ரீனிவாஸராவ் அவர்கள் குண்டூர் டெம்பொரெரி சப்கோர்ட்டில் தாகல்செய்த பாகவியாஜ்ஜியத்தில் வாதி தாவாசொத்துகளின் சுவாதீன அனுபோகத்திலிருக்கிற ஒரு டெனெண்டென்றும் தனக்காகவும் மற்றடெனெண்டுகளுக்காகவும் தான் இந்தபிராது தாகல் செய்கிறதாகவும் சொல்லிக்கொண்டார்.

டெனெண்டாகிய வாதி இந்தபாகவியாஜ்ஜியம் செய்யக் காரணமென்னவென்று கவனிக்கவேண்டும். எதிரிகள் தாவாசொத்துகளில் பாத்தியமுடைய பங்காளிகளாக இருக்கலாம்.

இவ்விதமான பாகவியாஜ்ஜியத்திற்கு மவுண்டு கட்டவேண்டிய சட்டமுறையைப்பற்றி ஆட்சேபனைகள் ஏற்பட்டு சப்கோர்ட்டார் கோர்ட் பீஸ் ஆக்டு 7 (V)-வது பிரிவின்படி தீர்வை துகையின் ஐந்து மடங்குப் பரிமாணத்தைக் காட்டி அதன்மேல் மவுண்டு கட்டவேண்டுமென்றும் அப்படிக்கில்லாமல் வாதி ஷை ஆக்டு II ஷெடியூல் 17 (6)–வது பிரிவின்படி ரூ10-ஸ்டாம்புகட்டி தாகல் செய்த இந்தபிராதை ஏற்றுக் கொள்ளாமல் தள்ளி விட்டமையால் வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்ததில் பாகவியாஜ்ஜியத்தில் சம்மந்தப்பட்ட சொத்தில் வாதிசுவாதீன முடைத்தானவராய் பாகப்பிரிவினையை அபேட்சிக்கிற தாவாக்களின் பரிமாணத்தை நிர்ணயிக்கத்தகாதென்ற காரணத்தால் II ஷெடியூல் (6)-வது பிரிவின்படிக்கு 10-ரூ ஸ்டாம்பு கட்டவேண்டியது தான்நியாயமென்று அபிப்பிராயப்பட்டு சப்கோர்ட்டார் தள்ளுபடி செய்த உத்தரவை ரத்து செய்து பிராதைத்திரும்பவும் பயிலுக்கெடுத்துக் கொண்டு சட்டப்படி பைசலளிக்க வேணுமாக சப்கோர்ட்டாருக் குத்தரவளிக்கப்பட்டது.

கூட்டுக் குடும்ப சொத்தின் சுவாதீனத்தில் பாகம் வேண்டுமென்று கோறப்படுகிற பாகவியாஜ்ஜியத்தில் ஷை ஆக்டு 7 IV (b)-வது பிரிவின்படி வாதி தன் இஷ்டம்போல் வியாஜ்ஜியப் பரிமாணத்தைக் குறித்துக்காட்டி ஸ்டாம்பு கட்டலாமென்றும் ஆகவே 21 M. L. J. 21-ல் தீர்மானிக்கப்பட்டிருக்கிற முறையைப்பற்றி யோஜிக்கவேண்டிய அவசியமில்லை யென்றும் அதாவது இந்த தாவா சுவாதீனத்தில் பங்கு விகிதத்தை அபேட்சிக்கிறதாக ஏற்படவில்லை யென்றும் பற்பல கல்கத்தா கோர்ட் தீர்மானங்களில் இதைப்போன்ற பிராதுகளுக்கு II ஷெடியூல் 17 (6)-வது பிரிவின்படி ரூ. 10 ஸ்டாம்பு கட்டவேண்டியது முறையாகுமென்று சொல்லப்பட் டிருக்கிறபடியாலும் 34 அலகபாத் 184-ன் தீர்மான நியாயமும் அதைப்போலவே ஏற்பட்டிருப்பதாலும் தீர்வையின் பேரில் இத்தகைய வியாஜ்ஜியங்களுக்கு மவுண்டு கட்டவேண்டியதில்லையென்று கல்கத்தா தீர்மானங்களில் விளம்பியிருப்பதாலும் 44 I. C. 216-ல் ஏற்பட்டிருக்கிற கடைசியான தீர்மான நியாயத்தை அனுஸரித்தும் 33 பம்பாய் 658-ல் கொண்ட மாறுன அபிப்பிராயத்தை அனுஸரிக்க மனமற்றவர்களாய் மதராஸ் ஹைகோர்ட்டார் மேற்கண்ட விதமான அபிப்பிராயங் கொடுத்தார்கள். (38 M. L. J. 92).

ஓல்ட்வீல்டு & சேஷகிரி அய்யர் J. J.

(தஞ்சாவூர் ஜில்லா)

C. M. S. A. 75 of 1918-4 பிப்ரவரி 1919

அருணாசல வேலன் VS. வெங்கட்ராமய்யர்,

ஒரு அடமானதாரன் தஸ்தவேஜில் கட்டுப்பட்டிருக்கிற 6-அயிட்டம் சொத்துக்களில் 4-அயிடங்களைப் பற்றித் தனக்குள்ள பாத்தியதையை விலக்கிக் காட்டித்

224706

தனக்குச் சேரவேண்டிய அடமானக் கடன் பாக்கி முழுவதற்காகவும் மிகுதியான இரண்டு அயிடம் சொத்துக்களைப் பொருத்துமட்டும் டிக்கிரீ பெற்று அவ்விரண்டு சொத்துக்களை ஏலத்திற்குக் கொண்டுவந்து வசூலான தொகைபோக மிகுதியான டிக்கிரீ பாக்கிக்காக எதிரியின்பேரில் வெண்ணலை டிக்கிரீயளிக்கவேண்டுமாக வி. பி. வி. ஆர்டர் 34-ரூல் 6-ன் படி விண்ணப்பம் கொடுத்தார். டி. மு. கோர்ட்டார் வாதி கோறிய பிரகாரமே டிக்கிரீயளித்தார்கள். அப்பீலில் சப் கோர்ட்டார் அடமானக்கடன் தொகைக்கு நபர் ஜாமீனாகிற ஷரத்துக்கள் தஸ்தவேஜில் காணப்படாத காரணத்தால் அதாவது அடமான சொத்தின்பேரில் தொடர்ந்து கடனை வசூலிக்கத் தகுமேயொழிய இதரமான சொத்துக்களின் பேரிலாவது நபரின் பேரிலாவது தொடர்ந்து வசூலிக்கத்தக்க கடனாக மதிக்கதகாதென்று சொல்லி வாதிகொடுத்த விண்ணப்பத்தை டிஸ்மிஸ் செய்துவிட்டார்கள். அதன்பேரில் வாதி ஹைகோர்ட்டில் 2-வது மனு அப்பீல் தாகல்செய்ததில் வாதிக்கு வெண்ணலை டிக்கிரீ யளிக்கத்தகாதென்றும் ஆனால் சப் கோர்ட்டார் சொன்ன காரணங்களை ஏற்றுக் கொள்ளாமல் வாதி அடமான சொத்துக்கள் யாவற்றின் பேரிலும் தொடர்ந்து வசூலிதொகைக்கு மேல் பாக்கி நிற்கும் தொகைக்கு மட்டும் வெண்ணலை டிக்கிரீ யளிக்கத்தகுமென்றும் இந்தக்கேஸில் வாதி 4-அயிடங்களை விலக்கி அவைகளின் பேரில் தொடராமல் வசூலானதொகைக்கு மேலான டிக்கிரீ பாக்கிக்காக வெண்ணலை டிக்கிரீயடையக் கோறுவது சரியல்லவென்று சொல்லி பற்பல கல்கத்தா தீர்மான நியாயங்களை அனுஸரித்து அபிப்பிராயங் கொடுத்து வாதியின் அப்பீலை தள்ளுபடி செய்து விட்டார்கள். ஹைகோர்ட் தீர்மானத்தின் காரணச் சுருக்கமாவது:—

டி—மு கோர்ட்டார் 25 அலகபாத் 79, 28 அலகபாத் 19-ன் ஆதாரங்களைக் கொண்டு வாதிக்கு வெண்ணலை டிக்கிரீயளித்திருக்கிறார்கள் சப்கோர்ட்டார் அடமான தஸ்தவேஜின் கருத்தைக் கவனித்து எதிரி கடன் தொகையைத் திருப்பிக் கொடுக்கவேண்டிய உடன்படிக்கையும் பொருப்பும் காணப்படாத காரணத்தால் அடமானம் வைக்கப்பட்ட சொத்தின் மூலமாய் பாக்கியை வசூலிக்கத்தகுமே யொழிய வெண்ணலை டிக்கிரீயடையத் தகாதென்று அபிப்பிராயங் கொண்டு வாதியின் விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்து விட்டார்கள். ஆனால் அடமான டிக்ரீயின் வாசகத்தையும் தஸ்தவேஜின் வாசகத்தையும் கவனித்தால் எதிரி தொகையைச் செலுத்தவேண்டிய கடமை ஒப்புக்கொள்ளப் படவில்லையென்று உறுதியாய்ச் சொல்லமுடியாது. ஆனால் எதிரி தனக்குஏற்பட்டிருக்கிற பரிகாரங்களனைவற்றையும் நடத்திப் பார்த்துவிட்டபிறகுதான் வெண்ணலை டிக்கிரீ யடையக்கோரத்தகுமென்ற நியாயத்தைக் கொண்டு இந்தக்கேஸில் வாதி 4- அயிடங்களை நீக்கிவிட்டு வெண்ணலை பாக்கிக்காக விண்ணப்பம் கொடுப்பது ஏற்றுக் கொள்ளத்தகாதென்றே சொல்லவேண்டும் 45- கல்கத்தா 702-ல் சொல்லியிருக்கிறபடி வாதி தொடரக்கூடிய சொத்துகளின்பேரில் கூடியமட்டில் பிரயாசை எடுத்துப் பார்த்துவிட்டபிறகு டிக்கிரீபாக்கி தீராமற்போனால் மட்டும் வெண்ணலை டிக்கிரீயடைய லாயக்குண்டு. மேற்கூறிய கல்கத்தாகேஸில் அடமானதாருக்கு எல்லா சொத்துகளின்மீதும் டிக்கிரியளிக்கப்பட்ட போதிலும் வாதிசில அயிடங்களை மட்டும் ஏலம் போட்டு வசூலித்ததொகைபோக மிகுதிக்கு வெண்ணலை டிக்கிரீவேண்டுமென்று கோறிக்கொண்டதைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அந்தத் தீர்மான நியாயத்தை தாவா கேஸுக்குப் பிரயோகிக்கத்தகும். அடமான வியாஜ்ஜியத்தில் யாதொருகாரணமும் சொல்லாமல் சில அயிடங்களைத் தானே விலக்கிவிட்டு மற்ற அயிடங்களின் மீது டிக்கிரீ யடைந்திருக்கிறார்கள் 32-கல்கத்தா 890-ல் மேற்கூறிய நியாயம் தெளிவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

மதராஸ் ஹைகோர்ட்டில் இந்த பாயிண்டுக்கு நேரான அதாரிடிகள் காணப்படவில்லை. 17 மதராஸ் 309க்குச்சரியான 4 M.L.J. 91-ன் தீர்மானத்தில் மேற்கூறிய நியாயத்திற்குதவியான அபிப்பிராயம் குறித்துக்காட்டப்பட்டிருக்கிறது. பிரதிவாதியின் சொத்தைப் பொருத்து டிக்கிரீ பெற்றவாதி அச் சொத்தை ஏலம் போடப்பிரயத்தனப்பட்டபொழுது பிரதிவாதியின் சகோதரன் அந்த சொத்தின் பாத்தியஸ்தனாக வந்து ஆட்சேபித்து பிரதிவாதியாகிய தன் சகோதரன்மீது பாகவியாஜ்ஜியம் செய்து மேற்கூறியசொத்தைத் தன்னுடைய பாகத்திற்குப் பெற்றுக் கொண்டிருக்கிறார். அதனால் அடமான டிக்கிரீபெற்றவாதி எதிரியின் சகோதரனை டிக்கிரீயில் கட்டுப்படுத்தாமலும் அந்த சொத்தின்மீது தொடராமலும் எதிரியின்மீது வெண்ணலை டிக்கிரீயடையக் கோறினார். மதராஸ் ஹைகோர்ட்டார் அதற்கனுமதி கொடுத்திருக்கிறார்கள் அதற்குக் காரணமாக அடமான டிக்கிரிதாரன் எதிரியின் சகோதரன்மீது நடவடிக்கை நடத்துவதற்காக மிகுந்த பிரயாஸையும் செலவும் செய்ய வேண்டியதாகுமென்றும் அவ்வித வழக்குகளுக்குச் செல்லாமல் சுலபமாய்த் தன்பாக்கியை வசூலிக்க மார்க்கம்தேடினால் அதற்குக் கோர்ட்டார் அனுமதிகொடுக்கத் தகுமென்றும் ஜஸ்டிஸ் முத்துஸாமி அய்யரவர்கள் விளம்பி யிருக்கிறார்கள்.

224704

வெண்ணலை டிக்கிரீயடையக் கோறுமுன் வீண் வழக்குகளை நடத்திப்பார்க்கவேண்டிய கடமைகள் அடமான டிக்கிரீதார்களின் மீது சுமற்றப்படா தென்பது நியாயமே. எவ்விதத்திலும் யாதொரு காரணம் சொல்லாமல் சிலசொத்துகளை விலக்கிவிட்டு வெண்ணலை டிக்கிரீயடைய வழிதேடுவது சரியல்லவென்று மேற்கூறிய தீர்மானத்தாலும் கல்கத்தாகேஸின் தீர்மானங்களாலும் வெளிப்படுகிறது.

ஸி. பி. ஸி. ஆர்டர் 34 ரூல் 5-6-ன் வசனங்களும் வாதியின் முறைக்குதவியாகக் காணப்படவில்லை. (அடமான சொத்துகளை ஏலத்திற்குக் கொண்டுவந்த பிறகு) என்றதால் தஸ்தவேஜில் கண்ட ஒவ்வொரு சொத்தையும் டிக்கிரீயில் காட்டி ஒவ்வொன்றின்மீதும் தொடர்ந்து வசூலித்துக் கடன்தீராதபட்சத்தில் மட்டும் வெண்ணலை டிக்கிரீயடையக் கோறலாம். ஆனால் டிக்கிரீதுகையை வசூலிக்க சிலஅயிடங்கள் மட்டும் போதுமானால் ஏலம்போட்டு வசூலித்துக் கொள்ளலாயக்குண்டு அவைகளைமட்டும். அப்பொழுது அயிடங்களனைவற்றையும் ஏலம் போடவேண்டிய கடமையை வாதிக்கத்தகாது. ரூல் 6-ன்படி ஈட்டு சொத்துகளை ஏலம்போட்டு வசூலித்ததுபோக மிகுதிக்கு வெண்ணலை டிக்கிரீயளிக்கலாம்.

கடனாளி வாதியாக அடமானசொத்துகளை ஏலத்திற்குக் கொண்டுவந்து கடன்துகையைத் தீர்க்கவேண்டுமென்று கோறிக்கொண்டால் அடமான சொத்துகளிலிருந்து வசூலாகிற துகைக்கு மேலான கடன்பாக்கியைபற்றி மட்டும் கடனாளியின் மீது வெண்ணலை டிக்கிரீயளிக்கலாமேயொழிய மற்றப்படி வெண்ணலை டிக்கிரீயளிக்கும் நியாயம் ஏற்படாத. இத்தியாதி காரணங்களைச் சொல்லி அலகபாத் கோர்ட்டாருடைய தீர்மானங்களை அனுஸரிக்க மனமில்லாத வர்களாய் வாதியின் அப்பீலைச் செலவுடன் தள்ளுபடி செய்து விட்டார்கள். (38 M. L. J. 93)

சேஷகிரி அய்யர் & பிலிப்ஸ் J. J.

(கஞ்சம் ஜில்லா)

Crl. Rev. Case 669 of 1919–

21 நவம்பர் 1919

இப்பிலிமகதா வகையரா-எதிரிகள்.

கிரிமினல் புரொஸிஜர் கோடு 103-வது பிரிவின்படி ஆப்காரி இன்ஸ்பெக்டரவர்கள் தம்முடைய உத்தியோக தோரணையில் சோதனை போடுவதற்கு சகாயமாக நிற்கவேணுமாய் எதிரி வகையராக்களை அழைத்ததில் அவர்கள் மறுத்தமையால் அவர்களை இ. பி. கோ. 187-வது பிரிவின்படி பிராஸிகியூஷன் செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டதை 26-மதரூஸ் 419-ன் தீர்மான நியாயத்தைக் கவனித்து சட்ட விரோதமெனச் சந்தேகித்து ஜில்லா ஜட்ஜியவர்கள் ஹைகோர்ட்டுக் குரிபர் செய்தார்கள்.

ஹைகோர்ட்டார் 26 மதராஸ் கேஸின் நியாயத்தை வித்தியாஸப்படுத்திக்காட்டி அதாவது 187-வது பிரிவின் முதல்பாகத்தில் குறிக்கப்பட்டிருக்கிற "உதவி" என்ற வசனமும் பின்னால் வரும் அதே வசனமும் ஒரே கருத்தாக மதிக்கப்படலாமென்ற மேற்கூறிய தீர்மான அபிப்பிராயமானது தாவா கேஸின் சந்தர்ப்பத்தைப்பற்றியதாகுமென்ற ஜில்லா ஜட்ஜியவர்கள் அபிப்பிராயப்பட்டதை ஏற்றுக் கொள்ளாமல் கிரிமினல் புரொஸிஜர் கோடு 103-வது பிரிவின் 2-வது கிளாஸில் விதிக்கப்பட்டிருக்கிறபடி இன்ஸ்பெக்டரவர்கள் கிராமத்தாரை உதவிக்கு அழைக்க அதிகாரமுடையவரென்றும் அப்படி அழைக்கப்பட்டால் உதவிசெய்ய வேண்டிய கடமை கிராமத்தாரைச் சேர்ந்ததாகுமென்றும் கோர்ட்டில் சாட்சியம் சொல்லவேண்டுமானால் மட்டும் கோர்ட்டாருடைய சம்மன்ஸ் கட்டளை சர்வாகி யிருக்கவேண்டுமென்றும் ஆகவே எதிரிகள் இன்ஸ்பெக்டருக்கு சோதனையில் உதவி செய்ய மறுத்தது இ. பி. கோ. 187-வது பிரிவின்படி குற்றமாகுமென்றும் எதிரிகளை தண்டித்தது நியாயமென்றும் அபிப்பிராயம் கொடுத்தார்கள். (37 M. L. J. 27)

ஆ. சீவ் ஜஸ்டிஸ் அப்துல்ரஹீம் & ஆட்ஜர்ஸ் J.

(விசாகப்பட்டணம் ஜில்லா)

A. S. No. 422 of 1916-

15 அக்டோபர் 1919

துண்டிக்கல்ல கேசவலு VS.

கலவ கண்டல ராஜாராம்

1-ம் பிரதிவாதி வாதிக்கு யாதொரு சொத்தை விக்கிறயம் செய்வதாக 17-2-1907-ல் ஒப்புக்கொண்டார். அதை நிறைவேற்றுவதற்கு யாதொரு காலத்தவணை குறிக்கப்படவில்லை, 17-4-1913-ல் 7-ம் பிரதிவாதி 1-ம் பிரதிவாதியின் பேரில் பெற்றிருந்த வெண்ணலை டிக்கிரீயை நிறைவேற்றி அதே சொத்தை விக்கிறயம் பெற்று அனுபவித்து வந்தார். வாதி 26-11-1913-ல் 1-ம் பிரதிவாதியினிடமிருந்து

விக்கிறய உடன்படிக்கையை நிறைவேற்ற முடியாதென்ற தகவல் தெரிந்த முதல் மூன்று வருஷங்களுக்குள்ளாக 1-ம் பிரதிவாதியின் பேரில் உடன்படிக்கையைப் பூர்த்திசெய்யும்படி அசல் தாவா செய்தார். அதற்குப்பின் 7-ம் பிரதிவாதி மேற்கூறிய விக்கிறய உடன்படிக்கையின் தகவல் தெரிந்தவராய் தாவா சொத்தை எல விக்கிறயம் பெற்றிருக்கிறதாகத் தெரிந்து 22-12-1914-ல் 7-ம் பிரதிவாதியையும் வாதி தன்னுடைய தாவாவில் பார்ட்டியாகச் சேர்த்தார். அக்காலத்தில் 1-ம் பிரதிவாதி உடன்படிக்கையை மறுதளித்த காலமுதல் கணக்கிட்டுப் பார்த்தால் 113-வது ஆர்டிகிலின் மூன்று வருஷகாலாவதி கடந்து விட்டதாகும். அதாவது 7-ம் பிரதிவாதியைப் பார்ட்டியாக சேர்த்தகாலத்தில் மேற்கண்ட வாய்தா கடந்து விட்டதாகும். இவ்வித சந்தர்ப்பத்தில் வாதிக்கு 7-ம் பிரதிவாதியின் பேரில் பரிகாரமளிக்கக் காலாவதி கடந்து விட்டதென்று கீழ்கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டு 7-ம் பிரதிவாதியைப் பற்றின மட்டில் வாதியின் தாவாவைத்தள்ளும்படி செய்துவிட்டார்கள். அதனால் வாதி 1-ம் பிரதிவாதியினிடமிருந்து விக்கிறயம் பெற்றுக்கொண்டு பின்னால் 7-ம் பிரதிவாதியின் மீது சுவாதீனத்திற்காக தாவா செய்யவேண்டியதாகும் எலவிக்கிறயத்தையும் ரத்து செய்யக்கோறி சுவாதீனப்பரிகாறமடையவேண்டும். அப்படிச் செய்யாமல் 7-ம் பிரதிவாதியின் பேரிலும் டிக்கிரீயளிக்கத்தகுமென்று ஹைக்கோர்ட்டுக்கு அப்பீல் செய்ததில் ஹைகோர்ட்டார் அதே விதமாக வாதிக்கு 7-ம் பிரதிவாதியைப் பொருத்தும் டிக்கிரீயளித்து வாதிக்கு 7-ம் பிரதிவாதியின் பேரில் பரிகாரமடைவதற்குக் காலாவதி தோஷம் வரவில்லை யென்று அபிப்பிராயங்கொடுத்தார்கள். அதாவது வாதிக்கு 1-ம் பிரதிவாதியின் மீது வியாஜ்ஜிய மூலம் ஏற்பட்டபொழுதே 1-ம் பிரதிவாதியின் உடன்படிக்கையைத் தெரிந்து எலவிக்கிறயம் பெற்ற 7-ம் பிரதிவாதியின் மீதும் ஏற்பட்டதாக நிதானிக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. ஹைகோர்ட் தீர்ப்பின் காரணச் சுருக்கமாவது :—

விக்கிறய உடன்படிக்கைக்கு யாதொருவாய்தா குறிக்கப்படாத பட்சத்தில் உடன்படிக்கையை நிறைவேற்ற மறுதளித்தமுதல் மூன்று வருஷங்களுக்குள் தாவாசெய்யவேண்டியது 113-வது ஆர்டிகிலின் முறையாகும். வாதி 1-ம் பிரதிவாதி மறுதளித்த முதல் மூன்று வருஷங்களுக்குள்ளாகவே தாவாசெய்திருக்கிறார்.

• 7-ம் பிரதிவாதி விக்கிறயத்தில்சேர்ந்து கையொப்பம்செய்ய மறுத்ததாகவும் அது முதல் மூன்று வருஷங்களுக்குப்பின் அவரைபார்ட்டியாகச் சேர்க்கப்பட்டதென்றும் சொல்லப்படவில்லை. ஆனால் 7-ம் பிரதிவாதி அவசியமான பார்ட்டியென்றும் அவர்மீதும் சேர்த்துவாதி டிக்கிரீயடையக் கோறியிருக்கவேண்டுமென்றும் ஆகவே வாதிக்கு ஏற்பட்ட வாய்தாவுக்குள் தாகலான இந்த பிராதில் 7-ம் பிரதிவாதி அந்தவாய்தாமுடியு முன்பார்ட்டியாகச் சேர்க்கப்பட்டிருக்கவேண்டுமென்று வாதிக்கப்படுகிறது. 7-ம் பிரதிவாதி விக்கிறயத்தில் சேர்ந்து கையொப்பம் செய்ய மறுதளித்ததாகச் சொல்லப்படாத காரணத்தால் 7-ம் பிரதிவாதி அவசியமான பார்டியாக மதிக்கப்படவேண்டுமானாலும் 7-ம் பிரதிவாதியின்பேரில் தாவாசெய்ய மூன்றுவருஷ வாய்தா கடந்து விட்டதாக வாதிக்கத்தகாது. உடன்படிக்கைக்கு பிரதானபார்ட்டி 1-ம் பிரதிவாதியே. ஸ்பெஸிபிக்ரிலீவ் ஆக்டு 27-வது பிரிவின்படி 7-ம் பிரதிவாதியைப் பார்டியாகச் சேர்த்திருக்கிறது வாதிக்குபின்னால் வேறுதாவா செய்யத் தேவையில்லாதபடி தனக்குறிய பரிகாரத்தை இந்த தாவாவில் பூர்த்தி செய்து கொள்ளும்பொருட்டு 7-ம் பிரதிவாதியைப் பார்ட்டியாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. உடன்படிக்கை செய்துக்கொடுத்த பிறகு 1-ம் பிரதிவாதி உடன்படிக்கையை மீறி வேறு எவருக்கு விக்கிறயம் செய்ய உத்தேசிக்கிறாரோ வென்றதகவல் வாதிக்குத் தெரியாமலிருக்கலாம்.

வாதிக்கு ஏற்பட்ட மூன்று வருஷவாய்தா கடந்த பிறகு அல்லது 1-ம் பிரதிவாதியின் மீது அந்தவாய்தாவுக்குள் தாவா செய்த பிறகு தாவா உடன்படிக்கையின் தகவல் தெரிந்த ஒரு பார்ட்டி தாவா சொத்தை விக்கிறயம் பெற்றதாகத் தெரியவந்தால் அந்தப்பார்ட்டியின் மீது அதற்குப்பின் பரிகாரம் தேடத்தகாதென்று சொல்வதும் 1-ம் பிரதிவாதியின்மீது வாய்தாவுக்குள் தாவா செய்திருந்தபோதிலும் வாய்தா கடந்தபிறகு பார்ட்டியாகச் சேர்க்கப்பட்ட 7-ம் பிரதிவாதியின் மீது யாதொரு டிக்கிரீயடையத் தகாதென்று வாதிப்பது நியாயமல்ல. இந்தப்பிராதில் 7-ம் பிரதிவாதியைப் பற்றிய பரிகாரத்திற்கும் 1-ம் பிரதிவாதி மறுதளித்த தினத்திலேயே வியாஜ்ஜிய மூலம் தொடங்கினதாகத் தீர்மானிக்கப்படவேண்டுமானால் மூன்று வருஷவாய்தாகடந்த பிறகும் கூட வாதி 7-ம் பிரதிவாதியின் மீது தனிமையாக தாவா செய்ய லாயக்குண்டென்று சொல்லவேண்டியதாகும். அப்படிப்பட்ட தாவாவுக்கு 7-ம் பிரதிவாதி ஆட்சேபணை செய்ய இடமிராது. ஆனால்தான் 12-வருஷகாலமட்டும் அனுபவித்து வந்ததாகச் சொல்லி எதிர்வாதம் செய்து வாதியின் சுவாதீனப்பிராதை ஆட்சேபிக்கலாம். அது வேறு விஷயமாகும்.

ஆகவே இந்தக்கேஸில் 7-ம் பிரதிவாதியின் மீது டிக்கிரீயடையக் காலாவதி தோஷமென்று கீழ் கோர்ட்டார் தீர்மானித்தது பிசகென்று சொல்லப்பட்டு வாதிக்கு 7-ம் பிரதிவாதியைப் பொருத்தும் டிக்கிரீயளிக்கப்பட்டது. 38 M. L. J. 29.

ஹானரபில் ஜஸ்டிஸ் சேஷகிரிஅய்யர்.

(மதரூஸ்)

Crl. R. Case 394 of 1919

26 ஸெப்டெம்பர் 1919.

பி. கந்தஸாமிமுதலியார் மனுதார்

எதிரியின்மகன் சின்னம்மைவார்த்து வருந்தினதால் மதராஸ்ஸிடி முனிஸிபாலிடியின் (Heath Officer) சுகவழிப் பாதுகாவலர் ஷை வியாதி ஒட்டுவாரொட்டியாதலால் ஸிடி முனிஸிபல் ஆக்டு 366-வது பிரிவின்படி எதிரிக்கு நோடீஸ் மூலமாய் அக்குழைந்தையை கிருஷ்ணாம்பேட்டையிலுள்ள காம்பு ஆஸ்பத்திரியில் விட்டு சிகிச்சைசெய்து கொள்ளவேண்டுமென்று உத்தரவளித்தார்கள். அக்குழந்தைக்கு ஏற்கனவே வைத்தியம் செய்துவந்த டாக்டர் ராமகாமத் என்றவர் அக்குழந்தையைப் புரம்பான ஒருவீட்டில் கொண்டுபோய் வைத்து சிகித்ஸைசெய்யும்படி எதிரிக்கு புத்திமதி சொன்னபிரகாரம் எதிரி நடந்துகொண்டார் ஆகவே நோயாளியின் நோயானது இதராளுக்குப் பரவத்தக்க அசவுகரியமானது ஷை டாக்டருடைய யோஜனையால் நிவர்த்திக்கப்பட்டது.

ஆனல் முனிஸிடல் அதிகாரியவர்கள் அளித்த உத்தரவின்படி எதிரி கிருஷ்ணாம்பேட்டை ஆஸ்பத்க்கு குழந்தையைக் கொண்டு விடாத காரணத்தால் எதிரியை இ. பி. கோ. 269-வது பிரிவின்படி பிரஸிகியூஷன் செய்து சிட்சைசெய்யக் கோரினதில் எழும்பூர் பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட்டாரவர்கள் எதிரியை குற்றவாளியெனத் தீர்மானித்து அபராத தண்டனை விதித்தார்கள். அதன்பேரில் எதிரி ஹைகோர்ட்டில் ரிவிஷன் விண்ணப்பம்கொடுத்ததில் ஹைகோர்ட்டார் மாஜிஸ்டிரேட்டாரின் தீர்மானத்தை ரத்து செய்து எதிரியின்பேரில் கிரிமினல் குற்றம் சாட்டத்தகா தென்று தீர்மான அபிப்பிராயங் கொடுத்தார்கள். ஹைகோர்ட் உத்தரவின் காரணச் சுருக்கமாவது:—

ஒரு குடும்பத்திற்கு மேலான ஜனங்கள் வசிக்கும் இடத்தில் அல்லது தகுந்த சவுகரியமில்லாத இடத்தில் இதராளுக்குப் பரவும்படி அபாயகரமான தொத்து வியாதியால் யாதொருவன் அவஸ்தைபடுவதாய் Health Officer-க்குத் தோன்றினல் மேற்கண்டவிதமான உத்தரவளிக்க லாயக்குண்டென்று முனிஸிபல் ஆக்டு 366-வது பிரிவில் விதிக்கப்பட்டிருக்கிறது. எதிரியை ஆஸ்பத்திரிக்கு அனுப்பலாமாவென்ற விஷயத்தைபற்றி தீர்மானிக்கவேண்டியது Health Officer-ன் யுக்தானுஸாரமாதலால் அவர் செய்தகட்டளை நிராகரிக்கத் தகாததென்றும் அதை நிராகரித்த எதிரியைத்தண்டிக்கவேண்டியது மாஜிஸ்டிரேட்டாருடைய கடமையாகுமென்று சொல்லப்பட்டது. எதிரி தன்குழந்தையின் வியாதி பரவாதபடிக்குச் செய்துகொண்ட முன்ஜாக்கிறதையான ஏற்பாடைபற்றி சாட்சியம்விட்டபோதிலும் மாஜிஸ்டிரேட்டார் அந்த சாட்சியத்தைவிட அனுமதிகொடுக்கவில்லையென்று இந்த ரிவிஷன் விண்ணப்பத்துடன் தாகலான பிரமாணபத்திரிகையினல் துலங்குகிறது. இவ்விதசந்தர்ப்பத்தில் எதிரியின்பேரில் கிரிமினல் குற்றஞ் சாட்டி தண்டிக்கிறது சரியாவென்று யோஜிக்கவேண்டும். முனிஸிபாலிடியாருக்கு மேற்கண்டவிதமான உத்தரவளிக்க அதிகாரமுண்டானலும் 366-வது பிரிவின்படி நோயாளிக்கு தொத்து வியாதிதானவென்று தெரிந்துகொள்ளுவதுமன்றி அவருக்கு சரியான சவுகரியத்துடன் கூடிய இடமில்லையென்றும் ஒரு குடும்பத்திற்கு மேலான மெம்பர்களடங்கிய வீட்டிலிருப்பதாகவும் கண்டால் மட்டும் ஆஸ்பத்திரிக்கு அனுப்பும் படியான கட்டளை கொடுக்கத்தகும். தாவா உத்தரவு பிறந்தகாலத்தில் மேற்கூறிய குறைவிலொன்று துலங்கினதைபற்றி சந்தேகமில்லை. அதாவது நோயாளி ஒரு குடும்பத்திற்கதிகமான ஜனங்களிருக்கும் வீட்டில் வைக்கப்பட்டிருந்திருக்கிறார். முனிஸிபாலிடியார் செய்த உத்தரவில் நோயாளியைத் தகுதியான இடத்தில் வைக்கவேண்டுமென்றும் இல்லாத பட்சத்தில் ஆஸ்பத்திரிக்கு அனுப்பவேண்டுமென்றும் எதிரிக்கு சவுகரியமான முறையைத் தெரிவிக்கவில்லையென்பது கவனிக்கத் தக்க குறைவாகும்.

அப்படியானல் எதிரி கட்டளை பிறந்த பின் டாக்டர் யோஜனையைக்கேட்டுத் தனிமையான ஒரு ஜாகாவில் நோயாளியைக் கொண்டுபோய் வைத்த நடத்தையானது ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்படவேண்டிய கட்டளைக்கு மீறின செய்லாகிலும் இ. பி. கோ. 269-வது பிரிவின்படி குற்றஞ்சாட்டப்படுவதற்குப் போதுமான மீறிநடத்தலென்று சொல்லத்தகுமாவென்று யோஜிக்கவேண்டும்.

முனிசிபல் ஆக்டு 366-வது பிரிவின் 3-வது கிளாஸில் சொல்லியிருக்கிறபடி முனிசிபாலிடியார் செய்த

உத்தரவை மீறி நடந்த எதிரி 269-வது பிரிவின்படி குற்றவாளியாகிறான். 269-வின்படி குற்றவாளியாவதற்கு வேண்டிய அம்சங்களிருக்கிறதாவென்று மாஜிஸ்டிரேட்டார் விஜாரிக்க வேண்டிய முறையே விலக்கப்பட்டிருப்பதாக ஸர்க்கார் வக்கீலவர்கள் வாதிக்கிறார்கள். ஒரு உத்தியோகஸ்தர் செய்யும் கட்டளையை மீறி நடக்கிறவனை குற்றவாளியென்று தீர்மானிக்குமுன் குற்றத்தை ருஜுப்படுத்தவேண்டிய கடமையில்லை யென்பது மிகவும் அபாயகரமான நீதிமுறையென்று சொல்லவேண்டும். பினல் கோடின்படி குற்றஞ்சாட்டப்படுகிறவன் குற்றத்தை ருஜுப்படுத்தும்படி எதிர்பார்க்கத் தகும். மற்ற ஜீவராசிகளுக்கு அபாயகரமாக வியாதியைப் பரவச்செய்யும் வண்ணமாய் எதிரி அஜாக்கிறதையாய் நடந்ததாக ருஜுப்படுத்தினால் மட்டும் குற்றவாளியென தீர்மானிக்கலாம். இந்தக் கேஸில் எதிரி அதிகாரியினால் ஏற்பட்ட உத்தரவை மீறி நடந்ததற்காகச் சார்ஜி செய்யப்படவில்லை. தொத்து வியாதியைப் பரவச்செய்யும் வண்ணமாய்த் தெரிந்து நடந்ததற்காக குற்றஞ்சாட்டப் பட்டிருக்கிறார். ஆகவே முனிசிபல் அதிகாரியின் உத்தரவு நியாயமாவென்று யோஜிக்கப்படவேண்டியதில்லை. எதிரி ஆஸ்பத்திரிக்கு அனுப்புவதற்கு பதிலாகத் தனிமையான ஜாகாவில் நோயாளியை வைத்த நடவடிக்கை 269-வது பிரிவின் குற்றத்திலடங்கியதாகுமாவென்று யோசிக்க வேண்டியதாகும். 269-வது பிரிவின் வசனத்தை கவனித்தால் எதிரி unlawfully or neglegently—(not illegally) சட்டவிரோதமாக நடந்திருந்தால் மட்டும் போதாது. வியாதி பரவத்தக்கதாய் கவலைத் தாழ்ச்சியுடன் இதராளுக்குத் தீங்குண்டாகும்படியாக நடந்துகொண்டதாக ருஜுபடுத்தவேண்டும். முனிஸிபாலிடி ஆக்டு 366-வது பிரிவிலும் நோயாளிக்குத் தகுந்த இடம் ஏற்பட்டிருக்கிறதா வென்ற விஷயம் யோஜிக்கப்படவேண்டுமென்ற கருத்து விளங்குகிறது எதிரியைச் சார்ஜ் செய்யுமுன் அப்படிப்பட்ட தகுதியான ஸ்தலத்தில் நோயாளி வைக்கப்பட்டிருக்கிறானாவென்று கவனித்துப்பார்த்திருக்கவேண்டும். 105 E. R. 762 ஐப்பார்க்கவும், 24 கல்கத்தா 494-ன் நியாயம் மிகவும் சமீபமான சந்தர்ப்பத்தை உடையதாய்க் காணப்படுகிறது. மகளை ஆஸ்பத்திரிக்கு அனுப்பச் சொன்ன பொழுது தாயார் தானும் மகளுடன் கூடச் செல்ல அனுமதி வேண்டுமென்றும் இல்லாவிடில் உத்தரவின்படி நடத்தமுடியாதென்று சொல்லிவிட்டதால் தாய் 269-வது பிரிவின் குற்றத்திற்காகச் சார்ஜ் செய்யப்பட்டாள். தாயின் வீட்டில் பற்பல குடித்தனக்காரர்களிருப்பதாய் சந்தேகப்பட்டு நோயாளியை ஆஸ்பத்திரிக்கு அனுப்பும்படி கட்டளை செய்ததாகவும் தாயின் வீட்டில் குடித்தனக்காரர் யாவரும் கிடையாதென்று தெரியவந்தமையாலும் நோயாளிக்குத் தாயின் வீட்டில் தகுதியான இடமிருப்பதாய்க் காணப்பட்டதாலும் குற்றஞ் சாட்டத்தக்கபடி எதிரி கவலைத் தாழ்ச்சியாக நடந்தாளென்று தீர்மானிக்க மனமில்லாமல் கேஸைத் தள்ளும்படி செய்து விட்டார்கள். யாதொரு சட்ட முறைக்கு விரோதமான காரியமானது சட்ட நியாயத்திற்குகந்ததாயிருக்கக்கூடுமென்று மேற்கூறிய கல்கத்தா கேஸில் விளம்பியிருக்கிற நியாயம் ஒப்புக்கொள்ளத்தக்கதே. உத்தரவை மீறி நடப்பது சட்டவிரோதமே. வியாதியைப் பரவச் செய்யாதபடி தகுந்த பந்தோபஸ்தில் நோயாளியை வைப்பது சட்டக் கருத்துக்குகந்த காரியமாகும். ஜனங்களுடைய சுவாதீனபாத்தியதைக்கு யாதொரு பங்கம் வாராதபடிக்கு அதிகாரிகள் சட்ட முறையைப் பிரயோகிக்கவேண்டியதென்று இங்கிலீஷ் தீர்மானங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. (1881) L. R. 6 A. C. 193-ன் 208-ஐப் பார்க்கவும். சுயாதீன பாத்தியதையை விலக்கும்படியான கருத்துடன் யாதொரு சட்டமுறை ஏற்பட்டிருந்தால் அக்கருத்தானது ஸ்பஷ்டமான வசனங்களால் காணப்படவேண்டும்; அல்லது அவசியமான அனுமானத்திற் கிடங்கொடுக்கிற முறையாக ஏற்பட்டிருக்கவேண்டும்.

இந்தக்கேஸில் Health Officer முனிஸிபாலிட்டியார் எதிரிக்கு நோட்டீஸ் கொடுத்து நோயாளியைத் தகுந்த இடத்திற்கு மாற்றவேண்டுமென்றும் இல்லாவிடில் காம்புக்குக்கொண்டுபோய் விட்டுவிடவேண்டுமென்றும் சவுகரியத்தைத்தந்து யாதொரு கட்டளையிட்டிருந்தால் நலமாக இருந்திருக்கும். எதிரியின் நடத்தையால் வியாதி பரவக்கூடாத நிலமை ஏற்பட்டுவிட்டமையால் கட்டளையை மீறின நடத்தை 269-வது பிரிவின் குற்றத்திற்குள்ளாகாதென்று சொல்லவேண்டும். இத்தியாதி காரணங்களால் கீழ் கோர்ட் தண்டனையுத்தரவு ரத்து செய்யப்பட்டது. அபராதம் வாபீஸ் செய்யப்பட்டது. டாக்டருடைய சாட்சி வாக்குமூலத்தைக் கோராதது பிசகென்று அபிப்பிராயப்பட்டால் அதற்காகத்திரும்பவும் கேஸை ரிமாண்டு செய்யத் தேவையில்லை யென்று ஸர்க்கார் வக்கீல் சொல்லுகிறார். (அதாவது அவரால் ஏற்படும் சாட்சியம். சம் ரிகார்டிலிருந்தால் எவ்வித முடிவடையலாமோ அம் முடிவுக்குத் தான் ஆட்சேபிக்கிறதில்லை யென்றது போல்ஸர்க்கார் வக்கீல் ஒப்புக்கொள்ளுகிறதாக நிதானிக்கவேண்டும்). மாஜிஸ்டிரேட்டார் இவ்விதமான சந்தர்ப்பங்களில் கவனிக்கவேண்டிய நியாயமுறையைப்பற்றிக் குறித்துக் காட்டப்பட்டதே போதுமானதென்று சொல்லப்பட்டது. (38 M. L. J. 80.)

———

சேஷ்கிரிஅய்யர் & மோர்-J-J.

(மதரூஸ்)

Crl R. case 443 of 1919-17 அக்டோபர் 1919.

நாதமுனி நாடார்-மனுதார்.

மரத்தொட்டிக்காரராகிய நாதமுனி நாடார் என்ற எதிரி மரத்தைச்சேர்த்து வைத்துக் கொள்ளவும் விற்பனைசெய்யவும் முனிஸிபாலிடியிலிருந்து லைஸென்ஸ் பெற்றவராயினும் அடுக்கி வைத்திருக்கிற மரங்களை வெயில் மழைகளின் உபத்திரவமில்லாதபடிக்கு ஒரு கொட்டகை போட்டுக்கொள்ளுவதற்குத் தனிமையான லைஸன்ஸ் வேணுமென்று இந்தக் கேஸில் தீர்மான அபிப்பிராயங் கொடுக்கப்பட்டது. மரத்தைச் சேர்த்துக் கொள்ளும் அனுமதி கொடுக்கப்பட்டதினாலேயே அதை பந்தோபஸ்து செய்துகொள்ள கொட்டகை போட்டுக்கொள்ளப் பிரத்தியேகமான அனுமதி வேண்டியதில்லை யென்ற கட்சி ஒப்புக் கொள்ளப்படவில்லை.

இந்தக்கேஸில் மனுதார் 325-வது பிரிவின்படி மரத்தைச் சேர்த்து வைத்துக்கொள்ள லைஸன்ஸ் பெற்றவராய் அதன்பேரில் கொட்டாய் போட்டுக்கொள்ள (பந்தல் போட்டுக் கொள்ள) லைஸன்ஸ்துகை செலுத்தவேண்டியதில்லை யென்று முனிஸிபல் பிரஸிடெண்டு அவர்கள் எதிரிக்குத் தெரிவித்திருக்கிறார். கொட்டகைக்கு பிரத்தியேகமான லைஸன்ஸ்தேவையில்லை யென்ற கருத்தாய் பிரஸிடெண்டு அவர்கள் மேற்கண்ட விதமாய்த் தெரிவித்திருக்கிறார்கள். 42மதரூஸ்7-ன் தீர்மானத்தைக் கவனித்து 262-வது பிரிவின்படி பந்தல் போடுகிறதற்காக ஏற்பட்டிருக்கிற லைஸன்ஸானது மனுதார் 325-வது பிரிவின்படி மரத்தைச் சேர்த்து ஸ்டோர்செய்து விக்கிறய படுத்தவதற்காகப் பெற்றிருக்கிற லைஸன்ஸில் அடங்கியிருக்கிறதாகச் சேர்மென் (பிரஸிடெண்டு) அபிப்பிராயங்கொண்டது பிசகென்று சொல்லவேண்டும். ஆகவே மனுதார் பந்தல் லைஸன்ஸ் வாங்காத குற்றத்திற்காகப் பிராஸிகியூஷன் செய்யப்பட்டது சரியே.

இரண்டாவதாக பிரெஸிடெண்டு எழுதின கடிதத்தை ஒருஅனுமதியாகவைத்துக் கொண்டு எதிரியைக் குற்றபடுத்தாமலிருக்கலாமென்று வாதிக்கப்பட்டது. ஆனால் அந்த யாதாஸ்தில் காலமும் எல்லையும் குறிக்கப்படவில்லை. முனிஸிபல் சேர்மெனவர்களுக்கு காலத்தைக் குறிப்பிடாமல் சாசுவதமாய்ப் பந்தல் போட்டுக்கொள்ளும்படி அனுமதி கொடுக்கும் அதிகாரம் கிடையாது. என்றாலும் இந்தக்கேஸில் எதிரி பிரஸிடெண்டினுடைய கடிதத்தைப் போதுமான அதாரிடியாக நம்பி நடந்தமையால் 25-ரூபாய் அபராதத்தை ரூ 5. ஆகக் குறைத்து மாஜிஸ்டிரேடாருடைய அபராத தண்டனை உத்தரவைக்காயப்படுத்தினார்கள். எதிரி ஆதாரங்கொண்ட கடிதத்தை எழுதியனுப்பிய பிரஸிடெண்டு வேராகவும் பின்னால் எதிரியைப் பிராஸிகியூஷன்செய்ய உத்தரவளித்த பிரஸிடெண்டு வேராகவுமிருக்க வேண்டுமென்று நிதானிக்கலாம். (38 M.L.J. 84)

சில தீர்ப்புச் சுறுக்கங்கள்

சீவ் ஜஸ்டிஸ் வாலிஸ், ஓல்ட்வீல்டு & சேஷகிரி அய்யர் J.J.

A. S. 190 of 1917-27 ஜனவரி 1920

அடமானம் வைக்கப்பட்டிருந்த பல சொத்துக்களில் ஒன்றின்பேரில் ஏற்பட்டிருந்த முன் அடமானத்தை மீட்டுக்கொள்ளும் பாத்தியதையை ஏலத்தில் எடுத்த பின்னடமானதார் தனக்கு வரவேண்டிய அடமான கடன் பாக்கிக்காக மேற்கண்ட விதமாய் ஏல விக்கிறயமான சொத்து பாகத்தின் பேரில் டிரான்ஸ்பர் ஆப் பிராபர்டி ஆக்டு 8-வது பிரிவின்படி அடமானக்கடன்பாக்கி தீர்ந்துபோய்விட்டதாக மதிக்கப்படவேண்டு மென்றும் அதாவது தனக்கு வரவேண்டிய மொத்தக் கடனுக்கும் அடமானம் வைக்கப்பட்ட சொத்துக்களின் மொத்த கிறய மதிப்புக்கும் ஏற்பட்ட தாரதம்மியப்படி கணக்கிட்டு ஏலமான சொத்தின் மீது சமத்தத்தக்க கடன் பாகத்தைத் திரும்பவும் வசூலிக்கத் தகாத வண்ணமாய்த் தான் எடுத்த ஏல விக்கிறயத்தால் ஏற்படுமென்றும் தவிற ஏலமான சொத்தின் விலை மதிப்பு முழுவதையும் அடமானக்கடனுக்காக வஜா

செய்து கொண்டு மிருதியான அடமான சொத்தின்பேரில் தொடரலாமென்று கடனாளி வாதிக்கக்கூடாதென்றும் சொல்லப்பட்டது. 20 அலகாபாத் 23-ன் தீர்மான அபிப்பிராயம் அனுஸரிக்கப்படவில்லை. 2 மதராஸ் வாரக் குறிப்புகளின் 342-நிராகரிக்கப்பட்டு 22 அலகபாத் 284 ஆதாரங் கொள்ளப்பட்டு மேற்கண்ட விதமான அபிப்பிராயங் கொடுக்கப்பட்டது.

சீவ் ஜஸ்டிஸ் வாலிஸ் & கிருஷ்ணன்-J.
C. M. P 187 of 1920 in A. S. 176 of 1919
28 ஜனவரி 1920.

கிழ்கோர்ட் தீர்ப்பின்பேரில் அப்பீல் செய்யாத மற்றொருபிரதிவாதியால் வாங்கப்பட்டிருந்த கிழ்கோர்ட் ஜட்ஜிமெண்டு டிக்கிரியின் நகல்களை அப்பீலில் மிமோவுடன் தாகல்செய்த அப்பீல் வாதிதானுகவே நகல்மிமோ கொடுத்து அது டிஸ்மிஸ் ஆனபிரகு திரும்பவும் நகல்வாங்க யாதொருநடவடிக்கையும் எடுக்காத போதிலும் அப்பீல் வாய்தாவை கணிப்பதில் அப்பீல் மிமோவுடன் தாகல்செய்த டிக்கிரி ஜட்ஜ்மெண்டு நகலை வாங்குவதற்குக் கோர்ட்டாரால் ஏற்பட்டிருந்த காலதாமதத்தைத் தள்ளிக் கொடுக்கவேண்டுமென்று தீர்மான அபிப்பிராயங் கொடுக்கப்பட்டது. காலாவதி ஆக்டு 12 (2) -வது பிரிவின் சிலாக்கியம் அப்பீலில் வாதிக்குக் கிடைத்தது.

சதாசிவய்யர் & ஸ்பென்ஸர்-J-J.
S. A. 426 of 1919-3 பிப்ரவரி 1920

கடனாளி இன்ஸால்வெண்டாக நிர்ணயிக்கபட்டபின் அடமானதாரன் அபிஷியல் அஸையினியைப் பார்ட்டியாக சேர்க்காமல் கடனாளியின் பேரில் வாங்கிக்கொண்ட அடமான டிக்கிரியானது நிஷ்பிரயோஜன மானதென்றும் அதை நிறைவேற்றத் தகாதென்றும தீர்மான அபிப்பிராயங்கொடுக்கப் பட்டது.

அப்துல்ரஹீம் & கிருஷ்ணன்-J-J.
S. A. 289 of 1919-5 பிப்ரவரி 1920

யாதொரு பில் அல்லது கோட்டின் துகையை வசூலிப்பதற்கு டிமாண்டுசெய்கிற பொழுது துகையைச் செலுத்தினல் செலுத்தும் கையோடு அந்தபில் அல்லது நோட்டை அற்பிதம் செய்துவிடும்படியாக டிமாண்டு செய்கிறவரின் கைவசத்தில் தயாராக இருக்கவேண்டு மென்றும் துகையை லாயரைக்கொண்டு ரெஜிஸ்டர் நோடீஸின் மூலமாய் டிமாண்டுசெய்தால் அது சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்க டெண்டராகாதென்று 22 மதராஸ் 331, 8 M L J 182 இவைகளை ஆதாரங்கொண்டு தீர்மான அபிப்பிராயங் கொடுக்கப்பட்டது.

ஜஸ்டிஸ் ஓல்ட்வீல்டு, & சேஷகிரி அய்யர் J
C. M. A. 263 of 1919-4 பிப்ரவரி 1920

ஸி. பி. ஸி. 21 பிரிவின் நியாயத்தையும் முறையையும் நிறை வேற்றும் நடவடிக்கைகளின் விஷயமாய்ப் பிரயோகிக்கத் தகுமாவென்றும் இரண்டாவதாக நிறைவேற்றும் கோர்ட்டார் டிக்கிரியளித்த கோர்ட்டாரின் அதிகார வரம்பைப்பற்றிய ஆட்சேபனையை ஏற்றுக்கொள்ளத்தகுமாவென்றும் ஆக இரண்டு சட்டபாயிண்டுகள் புல்பெஞ்சாருடைய தீர்மான அபிப்பிராயத்திற்கு ரிபர் செய்யப்பட்டது. ஸி. பி. ஸி. 21, வது பிரிவின்படி அசல் கோர்ட்டாருடைய அதிகார வரம்பைப்பற்றிய ஆட்சேபணைகள் முதல் முதலாய் அப்பீல் கோர்ட்டில் செய்யக்கூடாது. இஷ்ஷு ஏற்படவேண்டிய நம்பராக இருந்தால் இஷ்ஷு ஈரங்கிக்கு முந்தியும் அல்லது இஷ்ஷு ஈரங்கி காலத்திலாவது ஆட்சேபித்திருக்கவேண்டும். அவ்வித ஆட் செய்யும் சந்தர்ப்பம் ஏற்பட்ட கையோடு தாமதிக்காமல் ஆட்சேபித்திருக்கவேண்டும். தவிற அதிகாரவரம்பில்லாதபடி யாதொரு கோர்ட்டார்செய்கிற உத்தரவினல் நீதிதவறி யாதொரு பரிகாரமளிக்கப்பட் டிருந்திருக்கவேண்டும்.

சதாசிவய்யர் & ஸ்பென்ஸ்-J-J.
S. A. 504 of 1919-5 பிப்ரவரி 1920

ஜப்தியான சொத்தைப் பராதீனம்பெற்றபார்ட்டியின் பாத்திய மனு நடவடிக்கையில் ஏற்பட்ட விரோதமான உத்தரவை ரத்து செய்யும்பொருட்டு தாகலான

அசல் வியாஜ்ஜியத்தில் ஜப்திசெய்த டிக்கிரீ பாக்கிதாரன் எதிரான்ஸரில் வாதிக்கேற்பட்ட பாரீனம் மோசக்கருத்துடன் கூடியதென்று ஆட்சேபனைசெய்யத் தகுமாவென்ற பாயிண்டானது புல்பெஞ்சுக்கு ரிபர் செய்யப்பட்டது.

மதராஸ் ஹைகோர்ட் தீர்மானங்கள்.

சேஷகிரி அய்யர் & மோர்-J-J.

(குண்டூர்ஜில்லா)

S. A. 1754 of 1918-13 நவம்பர் 1919

வெங்கம்மமிடி பாலகிருஷ்ணய்யா vs வெங்கம்மமிடி த்ரியம்பக்கம்.

1-ம் வாதியாகிய தகப்பன் 1-ம் பிரதிவாதியை ஸ்வீகாரமெடுத்துக்கொண்டபிறகு மூத்த தாரம் இறந்துபோகவே இண்டாவது விவாகம் செய்துகொண்டு 2-ம் வாதியாக ஒரு ஔரஸபுத்திரனை அடைந்தார். இரண்டாவது விவாகம் செய்து கொண்டகாலத்தில் ஸ்வீகாரபுத்திரனுடைய ஜனக தகப்பனுக்கும், 1-ம் வாதிக்கும் தகரார் ஏற்பட்டு பஞ்சாயத்தாருடைய தீர்மானப்படி ஸ்வீகாரபுத்திரனுக்கு சமபாதி சொத்தும் 1-ம் வாதிக்குச் சமபாதி சொத்துமாக பாகித்துக் கொள்ள வேண்டியதென்று பிறந்தஅவார்டின்படி பாகப்பிரிவினை செய்யப்படவில்லை. விவாகம் நடந்து புத்திரனும் ஜனித்தபிறகு மேற்கூறிய அவார்டை அவமதித்து தகப்பனும் ஔரஸ் புத்திரனுமாய்ச்சேர்ந்து வாதிகளாய் ஸ்வீகாரபுத்திரன்மீது பாகவியாஜ்ஜியம் தொடுத்து சாட்டியபடி அவருக்குக்கிடைக்கவேண்டிய பாகத்தை நிர்ணயிக்கும்படி கோரிக் கொண்டார்கள். அக்காலத்தில் ஸ்வீகாரபுத்திரனுக்கு ஜனித்திருந்த புத்திரனையும் 2-ம் பிரதிவாதியாய்ச் சேர்க்கப்பட்டிருந்தமையால் இந்தக்கேஸில் ஏற்படும் தீர்மானம் அவனையும் கட்டுப்படுத்துமென்று நிதானிக்கவும். 1-ம் பிரதிவாதிக்குரிய பாகத்தில் 2-ம் வாதி பங்குவிகிதமடைய வேண்டுமே யொழிய 2-ம் பிரதிவாதிக்கு அனுமத்தாகக் குடும்பசொத்தில் யாதொருபாகம் கிடைக்கத்தகாது. பிரதிவாதி எதிரான்ஸரில் பஞ்சாயத்தாருடைய அவார்டை அனுஸரித்துக் கோர்ட்டார் டிக்கிரீயளிக்க வேண்டுமென்று கோறிக் கொண்டதை டி-மு கோர்ட்டார் ஒப்புக்கொள்ளாமல் அவார்டானது டிக்கிரீயாகக் கோர்ட்டில் ரிகார்டாகாதபடியாலும் ஷை அவார்டு ரெஜிஸ்டராகாதபடியாலும் அவார்டை இந்தவியாஜ்ஜியத்தில் ருஜு அம்சத்தில் ஏற்றுக்கொள்ளத் தகாதென்று அபிப்பிராயங்கொண்டு (1883)ம் வருஷத்திய 7 மதராஸ் 253-ன் தீர்மானநியாயத்தை அனுஸரித்து தகப்பனுக்கும் ஔரசபுத்திரனுக்கும் ஸ்வீகாரபுத்திரனுக்கும், ஸமபாகமாக சொத்துகள் பிரித்துக் கொடுக்கப்பட வேண்டுமென்று தீர்மானித்து அம்மூவருக்கும் மூன்றி லொருபாகமாகப் பிரிவினை டிக்கிரியளித்தார்கள், மேற்கூறிய7 மதராஸ் கேஸின் தீர்மான நியாயம் (1915) 40 மதராஸ் 632-ல் நிராகரிக்கப்பட்டமையால் டி-மு கோர்ட்டாருடைய க்டிகிரீயானது கட்டாயம் மாற்றப்படவேண்டியது நியாயமே, தவிற டி-மு கோர்ட்டார் அவார்டுயதார்த்தமென்று ஒப்புக்கொள்ளவுமில்லை சப்கோர்ட்டார் அப்பீலில்டி-மு கோர்ட்தீர்மானத்தை ரத்துசெய்து 1-ம் பிரதிவாதியாகிய ஸ்வீகாரத்திரனுக்கு குடும்பபுசொத்தில் ஒன்பதிலொரு பாகம்தான் கிடைக்கத்தகுமென்று மனு தர்ம சாஸ்திரவிதி முறையை அனுஸரித்து டிக்கிரீயளித்தார்கள். இந்த அப்பீல் வாதியால் தாகலானபடியால் 1-ம் பிரதிவாதியாகிய ஸ்வீகாரபுத்திரன தன்க்குரிய ஆட்சேபனையைப்பற்றிக்ராஸ் அப்பீல்தாகல் செய்தார் அதில் அவார்டை அனுஸரித்துத் தனக்கு சமபாதி சொத்து கிடைக்கவேண்டுமென்றுகேட்டுக்கொள்ளவில்லை.

ஹைகோர்ட்டார் 2-வது அப்பீலில் சப்கோர்ட் தீர்மானத்தைக்காயப்படுத்தி 2-வது அப்பீலைச் செலவுடன் தள்ளுபடி செய்து விட்டார்கள்.

ஹைகோர்ட் தீர்மானத்தின் காரணச் சுருக்கமாவது.:—

பிரதிவாதிக்ராஸ் அபபீலில் அவார்டின் நியாயத்தை அபேட்சிக்காதபடியால் அதின்படி சமபாதி கிடைக்கவேண்டியதில்லை யென்று ஒப்புக்கொண்டும் டி. மு. கோர்ட்டாருடைய டிக்கிரீயை நிலைக்கச் செய்யும் பொருட்டாகிலும் ஷை அவார்டை ருஜுபாகத்தில் ஏற்றுக்கொள்ள

வேண்டுமென்று பிரதிவாதிக்காக மகா-ா-ா-ஸ்ரீ A. கிருஷ்ணஸாமி அய்யரவர்கள் வாதிக்கிறார்கள். இந்த பாயிண்டானது கீழ் கோர்ட்டில் வாதிக்கப் பட்டதாகப் பிரமாணப் பத்திரிகை யாதொன்றும் காணப்படவில்லை. தவிர அவார்டின் யதார்த்தமே தகரார் செய்யப்பட்டிருக்கிறது இருதரத்தாரும் சம்மதித்து அவார்டின் தீர்மானத்தைப் பின்பற்றக்கூடாதென்று சொல்லி அதைப்பற்றி ஏற்பட்ட முதலாவது இஷுவை வாதிக்காமல் விட்டிருக்கிறார்கள். 25 மதராஸ் 367-ல் பிரிவி கௌன்ஸிலார் தீர்மான அபிப்பிராயங்கொடுத்திருக்கிறபடி விவாதமான யாதொரு பாயிண்டைப்பற்றிய இஷுவைக் கைவிட்டு மற்ற பாயிண்டுகளைத் தீர்மானிக்கும்படி கக்ஷிபாடலாம், பார்ட்டிகளுக்கும் வக்கீல்மார்களுக்கும் அவ்விதமாய் நடந்துகொள்ள லாயக்குண்டு. அவ்வண்ணமாகவே இந்தக் கேஸில் நடந்திருக்கிறது. ஆகையால் அவார்டின் யதார்த்தத்தைப்பற்றிக் கீழ்கோர்ட்டார் தீர்மான அபிப்பிராயங்கொடுக்கும் பொருட்டு கேஸை ரிமாண்டு செய்வது அனாவசியமாகும்,

இரண்டாவதாக ஸ்வீகாரபுத்திரனுக்கு இந்தக்கேஸின் சந்தர்ப்பத்தில் குடும்ப சொத்தில் என்னபங்கு விகிதம் கிடைக்கத்தகுமென்று தீர்மானிக்கவேண்டியதாகும்.

மனுஸ் மிருதியின் 9-வது அத்தியாயம் 163-வது சுலோகத்தின் பிரகாரம் ஸ்வீகாரத்திற்குப்பின் ஔரஸ புத்திரன் ஏற்பட்டால் ஸ்வீகார புத்திரன் ஸ்வீகார தகப்பனுடைய ஜீவ்யகாலத்தில் சொத்து பாத்தியதையைக் கொண்டாடி பாகப்பிரிவினையை அபேக்ஷித்தால் அவருக்குக் கேவலம் ஜீவனும் சமென்ற சவரக்ஷணைச் செலவுக்குறிய பாத்தியதை மட்டும் கிடைக்குமென்று சொல்லத்தகும். யாக்ஞவல் கருடைய வியாக்கியானத்தைக் கவனிக்குமிடத்து ஸ்வீகாரபுத்திரன் அஸத்தாக (துர் நடத்தை யுள்ளவராக) இருந்தால் மட்டும் மேற்கண்ட விதமாய் ஜீவனும்ச பாத்தியதைக்குமேல் கிடைக்காதென்று சொல்லவேண்டும். பின்னால் வாஸிஷ்டர், காத்தியாயனர், போதாயனர் என்ற மூன்று வியாக்கியானகர்த்தாக்கள் ஷை கிரந்தத்தைப் பற்றி எழுதினதில் ஸ்வீகாரத்திற்குப்பின் புத்திரன் ஜனித்துவிட்டால் ஸ்வீகார புத்திரனுக்கு நாலில் ஒரு பங்கு தான் கிடைக்குமென்று வியாக்கியானப்படுத்தியிருக்கிறார்கள். அதைப் பற்றி மதராஸ் ஹைகோர்ட்டார் தர்க்கித்துப் பார்த்து சொத்தை ஐந்து பாகமாக்கி ஸ்வீகார புத்திரனுக்கு ஒரு பங்கும் ஔரஸனுக்கு நான்கு பாகமும் பிரித்துக்கொடுக்கப்படவேண்டுமென்று விளம்பியிருக்கிறார்கள். அப்படிப் பார்க்குமிடத்து ஸ்வீகாரதகப்பனிருக்கிற பொழுது பாகப்பிரிவினையாகவேண்டுமானால் ஷையானுக்கு எதிரிஸ்தானத்தில் வருகிற பங்காளிகள் சமபாத்தியதையுடைய தகப்பன் மகன் இருவர்களுக்கும் ஸ்வீகாரபுத்திரனுக்கு ஏற்படுகிற பாகத்திற்கு நான்கு மடங்கு சொத்து சேரவேண்டியதாகும். ஸ்வீகாரப்புத்திரனுக்கு ஒரு பங்கானால் தகப்பனுக்கு 4 பங்கும் ஔரஸனுக்கு 4 பங்கும் கொடுக்கப்படவேண்டும். ஆகவே மொத்த சொத்தை 9 பங்காகப் பிரித்து ஸ்வீகாரபுத்திரனுக்கு ஒரு பாகமும் தகப்பனுக்கும் மகனுக்கும் நவ்வாலு பங்குமாகப்பிரித்துத் தரவேண்டும். அவ்விதமாகவே ஸப்கோர்ட்டார் டிக்கிரீயளித்திருக்கிறார்கள். (மேற்கூறிய கணக்குப் பரிசிலனை அடியேனால் நிதானிக்கப்பட்டதென்று கவனிக்கவேண்டும்),

இந்த தீர்மான நியாயத்தையும் கிரந்தத்தின் வியாக்கியான முறையையும் தாவா கேஸுக்குப் பிரயோகிக்கக் கூடாதென்று வக்கீல் மகா-ா-ா-ஸ்ரீ கிருஷ்ணஸாமி அய்யரவர்கள் வாதிக்கிறார்கள், தகப்பன் இறந்த பின் ஔரஸ புத்திரனுக்கும் ஸ்வீகார புத்திரனுக்கும் ஏற்படுகிற பாக விபாஜ்ஜியத்தில் மேற்கூறிய கிறந்த நியாயத்தை அனுசரிக்கலாமே யொழிய தகப்பனுடைய ஜீவதசையில் அந்த முறையை அனுஷ்டிக்கக்கூடாதென்று வாதிக்கப்பட்டு அதற்கு ஆதாரமாக 46 I. A. 97-க்குச் சரியான 36 M. L. J. 511-ல் பிரிவிகௌன்ஸிலார் கொடுத்திருக்கிற தீர்மானத்தையும், 30 பம்பாய் 270-43 கல்கத்தா 944-யும் எடுத்துக்காட்டப்பட்டது. முதல் கேஸில் ஸ்வீகார புத்திர

னுடைய நிலமையும் ஔரஸனுடைய நிலமையும் ஸரிஸமமென்று சொல்லப்பட்டது வாஸ்தவமே. ஆனால் ஜீவனும் சபாத்தியதையைப் பற்றின விஷயமாய் மேற்கூறிய அபிப்பிராயங் கொடுக்கப்பட்டது. ஸ்வீகார நிலமையினால் ஜீவனம் சபாத்தியதை நீங்கிப்போகாதென்று சொல்லப்பட்டது. அந்த தீர்மானம் பிரதிவாதியின் கக்ஷிக்கு உதவக் கூடியதல்ல. 40 பம்பாய் கேஸில் மூல புருஷன் மரணமடைந்தகாலத்தில் இரண்டு வம்சவரிசையாக் வாரிஸ்களாய் நின்றதில் ஒருவர் ஔரஸனாகவும் மற்றவர் ஸ்வீகார புத்திரனாகவும் பங்காளிகளாய் வழக்காடினதில் ஔரஸனுக்கும் ஸ்வீகாரபுத்திரனுக்கும் சரிசமமான பாக முண்டென்றும் மேற்கூறிய வாஸிஷ்டருடைய ஸ்மிருதியின் முறையை இவ்வித சந்தர்ப்பத்திற்குப் பிரயோகப்படுத்தக் கூடாதென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அதனால் தகப்பனுடைய ஜீவதசைக்குப்பின் ஏற்படுகிற பாகப்பிரிவினையில் ஔரஸனுக்கும் ஸ்வீகாரபுத்திரனுக்கும் வாஸிஷ்டருடைய கிறந்த முறைப்படி பங்கு விகிதப்படுத்தவேண்டுமே யொழிய தகப்பன் ஜீவதசையில் பாகப்பிரிவினை ஏற்பட்டால் அம்முறையை அனுஷ்டிக்கத்தகாதென்று வாதிக்கப்பட்டது. ஸ்மிருதி நியாயத்தை மேற்சொன்ன விதமாய்க் குறுகின சந்தர்ப்பத்தில் பிரயோகிக்கவேண்டிய காரணம் தோன்றவில்லை.

மதராஸ் ஹைகோர்ட்டிலேயே 38 I C 244-லும் A. S. 104 of 1914-லும் தகப்பனுடைய ஜீவதசையில் ஏற்பட்ட பாகவியாஜ்ஜியத்திலும் கூடஸ்வீகாரபுத்திரனுக்குள்ஸ் மிருதி கிறந்தத்தின்படி கால்பங்கு விகிதம்தான் கிடைக்குமென்று விளம்பி யிருக்கிறார்கள், அந்தக் கேஸ்களில் கிறந்தநியாயத்தைபற்றி ஆட்சேபனைகள் ஏற்பட்டு தர்க்கமானபின் கொடுக்கப்பட்ட தீர்மான அபிப்பிராயமல்லவென்றுசொல்லப்படுவதால் பிரதிவாதிகள் அவைகளால் கட்டுப்படவேண்டியதில்லை யென்று ஒப்புக்கொள்ளவேண்டும்,

ஆகவே மனுஸ்மிருதியின் முறையைபற்றி திரயோஜனைசெய்து யாதொரு அபிப்பிராயங் கொடுக்கத்தகும், அப்படி யோஜித்ததில் மேற்கூறிய இரண்டு கேஸ்களில் கொடுக்கப்பட்ட அபிப்பிராயமே சரியானதென்று சொல்லவேண்டியதாயிற்று. அதாவது தகப்பனுடைய ஜீவதசையில் ஏற்படும் பாகப்பிரிவினையிலும் ஸ்வீகார புத்திரனுக்கு வாஸிஷ்டருடைய கிறந்த நியாயப்படி கால்பங்கு விகிதம்தான் கிடைக்கும்.

சொத்துக்கள் நிராட்சேபனையானவைகள், ஆட்சேபனையுடன் கூடிவைகள் என்ற இருவகையாக ஹிந்துலாவில் பிரித்துக் காட்டப்பட்டு பாகபிரிவினைமுறைகள் நிராட்சேபனையான முதலாவது வகைசொத்துகளைபற்றிய அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

2-வது பிரிவில் தகப்பனுடைய ஜீவதசையில் ஏற்படும் பாகப்பிரிவினையைபற்றிய முறை விதிக்கப் பட்டிருக்கிறது. 3-வது பிரிவில் தகப்பன் இறந்தபிறகுஏற்படும் பாகப்பிரிவினை முறைகள் விதிக்கப் பட்டிருக்கின்றன. 4 முதல் 10 பிரிவுகளில் இருவகையான சந்தர்ப்பத்திலும் பிரயோகப் படுத்தக்கூடிய முறைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன.11-வதுபிரிவில் ஸ்வீகாரபுத்திரனுக்குறிய பங்குவிகிதமுறை விதிக்கப்பட்டிருக்கிறது. 11-வது பிரிவானது 4 முதல் 10-ம் பிரிவுகளைப்போல் தகப்பன் ஜீவதசையிலும் தகப்பனுக்கு பின்னும் ஏற்படுகிற சந்தர்ப்பங்களிரண்டிற்கும் பொதுவாய்ப் பிரயோகப்படுத்தக் கூடிய முறையாகவே மதிக்கத் தகும். ஆகவே 11-வது பிரிவின் கீழ்வரும் ஸ்வீகாரபுத்திரனுக்குறிய முறையானது தகப்பன் ஜீவதசையில் ஏற்படும் பாகப் பிரிவினையில் பிரயோகப்படுத்தக் கூடாதென்றுசொல்ல நியாயமில்லை. தகப்பன் இறந்தபின் ஏற்படும் சந்தர்ப்பத்தை தியானித்துக் கொண்டு 11-வது பிரிவை ஏற்படுத்தி யிருக்கிறதாக ஸம்ஸ்கிருத வசனத்தால் துலங்குமானாலும் தகப்பனுடைய ஜீவதசைக்கு ப்பின்னிட்டுத்தான் அவ்விதிமுறையை அனுஷ்டிக்க வேண்டுமென்று அவ் வசனங்களால் ஏற்படவில்லை. தவிர பிரதிவாதிக்காக எடுத்துக் காட்டப்பட்ட இரண்டு பிரிவி கௌன்ஸில் தீர்மானங்களும் கல்கத்தா ஹைகோர்ட் கேஸூம் ஆட்சேபனையுடன் கூடிய இரண்டாவது வகையான சொத்துகளை

பற்றியவைகளாக ஏற்பட்டிருக்கின்றன. அந்த தீர்மானங்களில் ஏற்பட்டிருக்கிற வியாக்கியானங்களுக்கு யாதொரு குந்தகமும் செய்யாமலே மேற்கூறிய 11-வது பிரிவின் முறையை தகப்பன் ஜீவதசையில்ஏற்படும் பாகப்பிரிவினை விஷயமாயும் பிரயோகபடுத்தலாமென்று சொல்லத்தகும். ஏனெனில் 11-வது பிரிவானது நிராட்சேபனையான சொத்துகளின் விஷயமாய் ஏற்பட்டவிதி முறையாகிறது. (தாவாசொத்துகள் நிராட்சேபனையான சொத்துவகையில் சேர்ந்ததாக மதிக்கப் படவேண்டும்). தவிற தத்தகசந்திரிகா, த்தகமீமாம்ஸ, ஸரஸ்வதி விலாச இவைகளில் வாஸிஷ்டருடைய ஸ்மிருதி நியாய முறையானது சகலவிதமான பாகப்பிரிவினைஏற்பாடுக்கும் பிரயோகப்படுத்த படவேண்டுமென்று சொல்லியிருக்கிறது. அதன்பிரகாரம் ஸ்வீகாரபுத்திரனுக்கு குறுகினபாகம்தானுண்டு. 40 பம்பாய் 270-ல் ஏற்பட்டிருக்கிற தீர்மானத்தின்படி இரண்டுவகுப்பினர் ஒரேகாலத்தில் வாரிஸ்நிலமைக்கு வந்தது அதில் ஒருவகுப்பு ஸ்வீகாரமாகவும் மற்றது ஔரஸமாகவும் இருந்தால் ஸ்வீகாரபுத்திரனுக்கும் ஔரஸனுக்கும் சரிசமானமாக பங்கு விகித மேற்படுவது நியாமே.

அன்றியும் போதாயன சூத்திரத்தில் ஸ்வீகார காலத்தில் ஸ்வீகார புத்திரதி மந்திர பூர்வமாக ஸ்வீகார தகப்பனுக்குப்பின்னால் ஔரஸன் ஜனித்தால் தான் ஷையானுடைய பாகத்திற்குக் கால் பங்கு விகிதத்திற்கு மேல் அபேட்சிக்கிறதில்லை யென்று உடன்படிக்கை செய்து கொடுக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறது. இத்தியாதி காரணங்களால் ஸ்வீகாரபுத்திரனாகிய பிரதிவாதிக்கு ஒன்பதில் ஒரு பாகமும் தகப்பனுக்கும் ஔரஸனுமாகிய 1-2-ம் வாதிகள் ஒவ்வொருவருக்கும் 9-ல் நாலு பங்குமாக சப் கோர்ட்டார் டிக்கிரீயளித்தது நியாயமென்று தீர்மானிக்கப்பட்டு 2-வது அப்பீல் செலவுடன் தள்ளுபடியாச்சுது. (28 M. L. J. 86).

சேஷகிரி அய்யர் & மோர் J.J.

(கோதாவரி ஜில்லா)

S. A. 1590 of 1918—4 ஆகஸ்டு 1919

காபதி பிரும்மய்ய VS. கூரல்லா ராமய்யா.

சாராயக்கடை லைசென்ஸ்தாராகிய 1-ம் பிரதிவாதி லைசென்ஸில் கண்ட நிபந்தனைகளுக்கு விரோதமாக ஜில்லா கலெக்டருடைய அனுமதியில்லாமல் 2 ம் பிரதிவாதியைக் கூட்டுப்பங்காளியாகச்சேர்த்துக்கொண்டு ஷை வியாபாரத்தை, நடத்தி வந்தகாலத்தில் வாதி ஷை கூட்டு வியாபார விஷயத்திற்காக இரண்டு பிரதிவாதிகளின் பேரில் கூட்டாக கணக்கு வைத்துக்கொண்டு கொடுக்கல் வாங்கல் செய்துகொண்ட வகையில் வாதி தனக்குச்சேரவேண்டிய பாக்கி தொகையை வசூலிக்கும் பொருட்டு எல்லூர் டி. மு. கோர்ட்டில் அசல் தாவா செய்ததில் அசல் கோர்ட்டாரும் அப்பீலில் சப் கோர்ட்டாரும் ஒரே அபிப்பிராயங்கொண்டு வாதி கோறியபடி பூரா தொகைக்கும் இரண்டு பிரதிவாதிகளின் பேரிலும் டிகிரி அளித்தார்கள். அதன் பேரில் பிரதிவாதிகள் ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் தாக்கல் செய்ததில் ஹைகோர்ட்டார் வாதிக்கு 2-ம் பிரதிவாதியின் பேரில் டிகிரி அடையத்தகாதென்ற காரணத்தைச் சொல்லி வாதிக்கு ஏற்பட்ட மொத்த பாக்கியில் சமபாதியைப்பற்றின மட்டில் 1-ம் பிரதிவாதியின் பேரில் மட்டும் செலவுடன் டிகிரி அளித்து 2-ம் பிரதிவாதி தன் செலவை தானே வகித்துக் கொள்ளவேண்டுமென்று தீர்மானம் கொடுத்து அந்தப்படி கீழ்க்கோர்ட்டார், அளித்த டிகிரியை திருத்தும்படி உத்திரவு கொடுத்தார்கள்.

ஹைகோர்ட்டு தீர்மானத்தின் காரணச் சுருக்கமாவது.

முதலாவதாக அப்காரி லைசென்சைப் பற்றிய வியாபாரத்தில் லைசென்ஸ்தார் பங்காளியொருவனை சேர்த்துக்கொண்டது சட்டவிரோதமான நடவடிக்கை யென்றும், ஆகவே வாதிக்கு யாதொரு பரிகாரமும் கிடைக்கத் தகாதென்று வாதிக்கப்படுகிறது. கலெக்டருடைய அனுமதி

யன்னியில் லைசென்ஸ்தாரன் தன்னுடைய வியாபாரபாத்தியதையை மற்றவர்களுக்கு விக்கிரயப் படுத்தவும் மாற்றிக்கொள்ளவும் உள்குத்தகைக்குவிடவும் கூடாது. கலெக்டருடைய அனுமதி பெறாமல் தன் வியாபாரத்தை நடத்த ஏஜெண்டு நியமனமும் செய்யக்கூடாது. பங்காளியை சேர்த்துக்கொள்ளக்கூடாது என்ற ஒரு குறிப்பான தடைமுறை லைசென்ஸில் காணப்படாத காரணத்தால் 2-ம் பிரதிவாதியைக் கூட்டுப் பங்காளியாய்ச் சேர்த்தது சட்ட விரோதமல்லவென்று வாதிக்காக வக்கில் மிஸ்டர் A. கிருஷ்ணசாமி அய்யரவர்கள் 37, பம்பாய் 320, (1910) மதறாஸ் வாரக்குறிப்புகளின் 549 இவைகளில் ஆதாரத்தைக்கொண்டு சமாதானம் சொல்லுகிறார்கள். மதறாஸ் வாரக்குறிப்பின் கேஸில் ஜட்ஜிமார்கள் லைசென்ஸின் நிபந்தனைகளைப் பார்வையிடக்கூடாத காரணத்தால் அதாவது லைசென்ஸ் கோர்ட்டில் தாக்கலாகாத காரணத்தைப் பற்றி வாதிக்கு அனுகூலமான யாதொரு தீர்மான அபிப்பிராயம் கொடுத்திருக்கிறார்கள் பம்பாய் கேஸின் நியாயத்தை கவனிக்குமிடத்து பம்பாய்கவர்ன்மெண்டார் நூதனமாய் ஏற்படுத்தியிருக்கிற லைசென்ஸில் முன்னிருந்த சில வசனங்களை நீக்கி விட்டிருப்பதால் லைசென்ஸ்தார்கள் கூட்டுப் பங்காளிகளை சேர்த்துக்கொள்ளும் நடவடிக்கையை சட்டவிரோதமாக மதிக்க எண்ணம் கொள்ளவில்லை யென்று ஜட்ஜி மார்கள் நிதானித்திருக்கிறார்கள். அது விஷயமாய் மதறாஸ் கவர்ன்மெண்டாருடைய கருத்து எவ்விதமென்றறிய ஹேதுகாமில்லை, ஆகவே லைசென்ஸில் கண்ட வசனங்களின் கருத்தைக்கொண்டு இந்தப்பாயிண்டைப்பற்றி தீர்மான அபிப்பிராயம் கொடுக்கப்படவேண்டும், ஏஜெண்டே ஏற்படுத்தக்கூடாது. அன்னியனைக்கொண்டு சரக்கு விற்பனைசெய்யக்கூடாது, பங்காளி ஒருவனைச் சேர்த்தால் வியாபாரத்தில் ஒரு பாகத்தை அவனுக்கு விற்பனை செய்யும் முறைக்கு ஒப்பாகச் சொல்லலாம். சரக்கு விற்பனை செய்ய அவனை ஏஜெண்டாக ஏற்படுத்தின விதமாய் மதிக்கத்தகும். அன்னியனுக்கு விற்பனை செய்வதும் ஏஜெண்டு நியமனம் செய்வதும் சட்ட விரோதமாவது போல் பங்காளியைச் சேர்ப்பதும் சட்டவிரோதமே.

இரண்டாவதாக பிரதிவாதிகள் கூட்டுப் பங்காளிகளாகச்சேர்ந்தது சட்டவிரோதமென்று தெரிந்து வாதி கொடுக்கல் வாங்கல் செய்தமையால் வாதிக்கு பரிகாரம் கிடைக்கத்தகாதென்று வாதிக்கப்படுகிறது. வாதிக்காக வக்கில் மிஸ்டர் கிருஷ்ணசாமி அய்யரவர்கள் எடுத்துக் காட்டிய 20. Q.B D. 387, L.R. 8. Q.B. 202-ம் வாதிக்கு பிரயோஜனமில்லை, வாதியே தன் பிராதில் 1-ம் பிரதிவாதியின் பேரில் மட்டும் லைஸென்ஸ் இருப்பதாகவும் 2-ம் பிரதிவாதியை அவர் பங்காளியாய் சேர்த்துக்கொண்டு வியாபாரம் நடத்திவந்ததாகவும் தனக்கு தெரியுமென்றே ஒப்புக்கொண்டிருக்கிறார். ஆகவே வாதி லேவாதேவி செய்யுமுன் 2-ம் பிரதிவாதியை சேர்த்துக்கொள்ள ஜில்லா கலெக்டர் அனுமதி கொடுத்திருந்தாரா என்று விஜாரித்தறிந்திருக்கவேண்டும். அப்படி விஜாரித்ததாக தெரியவில்லை. அதைப்பற்றிய ருஜுபாரம் வாதியைச் சேர்ந்ததாகும். வாதி அதைச்செலுத்தத் தவறிவிட்டாரென்று தீர்மானிக்கவேண்டும். ஆகையால் வாதி கூட்டுப்பங்கின் சட்டவிரோதத்தைத் தெரிந்தே கொடுக்கல் வாங்கல் செய்து வந்தாரென்று சொல்ல வேண்டியதாகிறது.

மூன்றாவதாக, அனுமதி யன்னியில் பங்காளியாய்ச்சேர்ந்த 2-ம் பிரதிவாதியின்பேரில் டிக்கிரீ யளிக்கத்தகாதென்றாலும் லைஸென்ஸ்தாரகிய 1-ம்பிரதிவாதியின் கடனுக்குக் கட்டுப்படவேண்டுமென்ற கட்சிக்கு சமாதானமாக வக்கில் மிஸ்டர் நாராயண மூர்த்தி அவர்கள் பின்வருமாறு வாதம் செய்தார்கள், அதாவது,— அனுமதி பெறாத நபரை பங்கில் சேர்த்த காரணத்தால் யாதொரு வியாபாரம் சட்ட விரோதம் என்று ஏற்பட்டால் 1-ம் பிரதிவாதியின் பேரிலும் வாதிக்கு வியாஜ்ஜிய மூலம் ஏற்படாதென்று சொல்லப்பட்டது. 1-ம் பிரதிவாதி ஷெ வியாபாரத்தை நடத்தி வந்திருக்கலாம். வாதி, 1-ம் பிரதிவாதிக்குமட்டும் கடன் கொடுத்திருந்தால் அதை வாபீஸ் அடையத் தகுமென்

ஒப்புக்கொள்ளப்படுகிறது. 2-ம் பிரதிவாதி கூட சேர்ந்ததினால் வாதியின் பாத்தியதை முற்றிலும் கெட்டுப்போகுமா? 32 பம்பாய் 581-ல் காணப்பட்ட வியாபாரமே சட்டவிரோத மானது. அப்படிப்பட்ட வியாபாரத்தை நடத்தின பிரதிவாதியுடன் கொடுக்கல் வாங்கல் செய்த வாதி கூட்டுக்குற்றவாளியாக மதிக்கப்படுகிறான். அவன் கொடுத்திருக்கிற தொகையை வசூலிக்க நியாயமில்லை. தாவாகேஸில் 1-ம் பிரதிவாதி நடத்தின வியாபாரம் சட்ட விரோதமான தல்ல. அதற்காக கடன் கொடுத்தவனுடைய மனசாட்சி அசுத்தமல்ல. அதாவது தப்பான வழிக்குத் தனசகாயம் செய்ததாக எண்ணம் ஏற்பட்டிருக்காது? 2-ம் பிரதிவாதியைச் சேர்த்ததினால் கூட்டுப்பங்கு வியாபாரம் எப்படி நடைபெறத்தகாததாயிற்றே யொழிய மற்றப்படி வியாபாரம் தன் மட்டில் முற்றிலும் சட்ட சம்மத மானதே. ஆகவே 1-ம் பிரதிவாதியை விலக்கப் பிரயத்தனப் பட்ட வாதம் ஒப்புக்கொள்ளத் தக்கதல்ல.

கடைசியாக, வாதிக்குப் பூராத் தொகையும் கிடைக்குமாவென்று யோசிக்கவேண்டும். வக்கில் கிருஷ்ணசாமி அய்யரவர்கள் 39 மதராஸ் 409-ன் பிரிவி கௌன்ஸில் தீர்மானத்தை அனுஸரித்து வாதியின் மொத்தபாக்கியையும் 1-ம் பிரதிவாதி செலுத்தக் கடவதென்று வாதிக்கிறார். அந்தத்தீர்மானம் செல்லத்தகாத யாதொரு உடன்படிக்கையைப்பற்றி ஏற்பட்டது. இந்தக் கேஸில் வாதியால் 1-ம் பிரதிவாதி எம்மட்டில் நன்மை அடைந்தான் என்று நிர்ணயிக்கவேண்டும். காண்டிராக்டு ஆக்டு 45-வது பிரிவின் அம்சம் உதவக்கூடியதல்ல. 1-ம் பிரதிவாதி வாதியின் கடன் தொகையில் சரிபாதியை அனுபவித்ததாக அனுமானித்து அம்மட்டில் ஏற்படும் தொகையை வாதிக்கு வாபீஸ் செய்யவேண்டியது ஞாயமென்று சொல்லத்தகும்.

இத்தியாதி காரணங்களால் வாதிக்கு 1-ம் பிரதிவாதியின் பேரில் கோரிக்கொண்ட தொகையின் ஒரு பாதிக்கு டிக்கிரீ யளிக்கப்பட்டது. (38 M. L. J. 123).

சேஷகிரிஅய்யர் & மோர்-J-J.

(செங்கல்பட்டு ஜில்லா.)

S. A. 1066 of 1917-30 செப்டெம்பர் 1919

முருகப்ப முதலியார். VS மூனுஸாமி முதலியார்.

1-ம் பிரதிவாதியின் காலஞ்சென்ற ஏஜெண்டானவன் 3-ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பிராமிஸரிநோட்டை ஷை பார் அதாவது 3-ம் பிரதிவாதி வாதிக்கு இண்டார்சுசெய்து மேடோவர் செய்து கொடுத்துவிட்டார். அக்காலத்தில் வாதி 1-ம் பிரதிவாதியின் ஆஸ்திகத்தைப் பற்றி மேடோவர் பெற்றவாதி கிஞ்சித் சந்தேகப்பட்டமையால் 2-ம் பிரதிவாதி 3-ம் பிரதிவாதிக்கு B. ஆதாரவாக தாக்கலான உடன்படிக்கையினால் நோட்டின் தொகைக்குதான் ஜாமீன் இருப்பதாக உடன்படிக்கை எழுதிகொடுத்திருந்தார் வாதி கோட்டின்பேரில் பிறகு தாக்கல்செய்ய எழுதிக் கொடுத்தவருடைய எஜமான், மேடோவர்பெற்றவர், ஜாமீன்தார் ஆகிய மூவர்களையும் பிரதிவாதிகளாகச் சேர்த்திருந்தார். தாவா பெண்டிங்கிலிருக்கையில் வாதி 1-ம் பிரதிவாதியின்பேரில் உள்ள பரிகாரத்தை வுத்டிருசெய்து கொண்டார். அதனால் மற்ற இரண்டுபிரதிவாதிகளின்பேரில் டிக்கிரி அளிக்கப்பட்டது. அசல் அப்பீல் இரண்டிலும் ஏற்பட்ட மேற்கண்ட விதமான டிக்கிரியின்பேரில் 2. 3. பிரதிவாதிகள் ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் தாக்கல்செய்தார்கள். ஹைகோர்ட்டார் கீழ்க்கோர்ட்டு தீர்மானமுடிவை ஞாயப்படுமென்று ஒப்புக் கொண்டு 2-வது அப்பீலை செலவுடன் தள்ளுபடிசெய்து விட்டார்கள்.

ஹைக்கோர்ட்டு தீர்ப்பின் காரணச் சுருக்கமாவது:—

Indian Contract Act 134-வது பிரிவின்படி வாதி கடனாளியுடன் செய்துகொண்டயாதொரு உடன்படிக்கையாலாவது; வாதியின் நடத்தை அல்லது நடத்தைக்குறைவு இவைகளின் பயனாகவும் கடனாளியின் பொறுப்புவிலக்கப்பட்டால் அதாவது கடனாளியென்ற நிலைமை நீக்கப்பட்டால் அக்கடனுக்காக ஜாமீன் கொடுத்திருக்கிறவர்களுடைய பொறுப்பும் கையோடு

நீங்கிவிடுகிறது. இந்த சட்ட நியாயத்தைப் பாராட்டி 1-ம் பிரதிவாதியின்பேரில் உள்ளபரிகாரத்தை வாதி வுத்டிரு செய்துகொண்டபடியால் மற்ற 2-பிரதிவாதிகளின்பேரிலும் பரிகாரம் யாதொன்றும் அளிக்கத்தகாதென்று வாதிக்கப்பட்டது, ப்ராமிஸரிநோட்டைப்பற்றிய தாவாவில் அதாவது Negotiable Instruments Act ன்படி தாக்கலான ப்ராமிஸரிநோட் வியாஜ்ஜியத்தில் மேற்கூறிய Contract Act-ன் சட்டநியாயத்தை பிரயோகிக்கக் கூடாதென்று அபிப்பிராயம் கொண்டு ஜில்லாகோர்ட்டார் அப்பீல் பிரதிவாதிகளுக்காக சொல்லப்பட்ட மேற்கண்ட வாதத்தை ஒப்புக் கொள்ளாமல் அவர்களின் பேரில் ஏற்பட்ட டிக்கிரியை காயப்படுத்தினர்கள். ஜில்லா ஜட்ஜி யவர்கள் சொன்ன காரணம் சரியானதல்ல. கடனாளி, ஜாமீன்தார் இவர்களுடைய சம்மந்தத்தைப்பற்றி Contract Act-ல் சொல்லப்பட்டிருக்கிற பொதுவான சட்ட ஞாயமானது எல்லாவிதமான உடன்படிக்கைகளுக்கும் உதவக்கூடியதென்று, சொல்லவேண்டும். அதாவது பிராமிஸரி நோட்டின் உடன்படிக்கையைப் பற்றியும் அந்த சட்ட ஞாயத்தை பிரயோகிக்கலாமென்று சொல்லவேண்டும் ஆகவே 2-3. பிரதிவாதிகளின் பேரில்டிக்கிரி ஏற்படவேண்டிய நியாயத்திற்கு Contract Act-ன் சட்டமுறை உதவாதென்ற காரணத்தைக் கொள்ளாமல் தாவாபெண்டிங்கிலிருந்த காலத்தில் 1-ம் பிரதிவாதியை விடுதலைசெய்தகாரணத்தால் மற்றவர்களின்பேரில் தொடர்ந்து தாவாவை நடத்தி பரிகாரமடைய வேண்டியபாத்தியதையானது கெட்டுப்போச்சுதாவென்ற முக்கியமான பாயிண்டைப்பற்றி மட்டும் யோஜனை செய்து தீர்மானம் கொடுக்கவேண்டியதாகும். (1871) L. R. 7 Common Pleas 9-என்னும் இங்கிலீஷ்கேஸில் ஜஸ்டிஸ் வுவில்லிஸ் துரையவர்கள் விளம்பியிருக்கிற இங்கிலீஷ்சட்ட முறையின்படி ஜாமீன்தார்களின்பேரில் தாவா செய்யும் பாத்தியதையை நிலை நிறுத்திக்கொண்டு முக்கியகடனாளியை விடுதலை செய்து விட்டகாரணத்தினுல் ஜாமீன்தார்களின்பேரில் தாவாசெய்யும் பாத்தியதையானது கெட்டுப்போகாது, ஜாமீன்தார்களின்பேரில் தொடரும் பாத்தியதையை வைத்துக்கொண்டு முக்கிய கடனாளியைவிடுதலை செய்வதாக யாதொரு உடன்படிக்கை பத்திரம் ஏற்பட்டால் ஜாமீன்தார்கள் பின்னுல் அந்தஉடன்படிக்கையின் முறைக்கு விரோதமாய் ஆக்ஷேபிக்கக் கூடாதென்றும் முக்கிய கடனாளியை எவ்வித நிபந்தனையுமில்லாமல் அக்கடனினின்று வாதி விடுதலைசெய்துவிடும் பக்ஷத்தில் கடன்பாபத்தானது தக்ஷணமே நிலையற்றுப் போய்விடுகிறதென்றும் ஆகவே அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் வாதி ஜாமீன்தார்களின் பேரில் டிக்கிரியடையத் தகாதென்றும் மேற்கூறிய இங்கிலீஷ் கோஸில் தீர்மான அபிப்பிருயம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இங்கிலீஷ் சட்ட முறையின் நியாயத்தை Indian Contract Act.ல் பிரயோகப்படுத்தக்கூடா தென்று ஒரு ஆக்ஷேபணையும் அப்படி பிரயோகப் படுத்தினுலும் இந்தக்கேஸில் வாதி 1-ம் பிரதிவாதியை விடுதலை செய்த காலத்தில் மற்றவர்களின் பேரில் தொடரும் பாத்தியதையை ஒரு நிபந்தனையாக ஏற்படுத்திக்கொள்ளவில்லை யென்ற மற்ரொரு ஆக்ஷேபணையும் பிரதிவாதிகளுக்காக சொல்லப்பட்டன. மூன்று பிரதிவாதிகளின் பேரிலும் தாவா செய்து ஒருவனை மட்டும் விலக்கின நடத்தையால் மற்ற இருவர்களின் பேரில் தொடர்ந்து நடத்த தயாராயிருப்பதாக எண்ணங்கொண்டிருந்ததாகவே நிதானிக்கவேண்டும், அவர்களின் பேரில் தொடரவேண்டுமென்ற கருத்தை இதை விட அதிகஸ்பஷ்டமாய் சொல்லமுடியாது, 1-ம் பிரதிவாதியை விடுதலை செய்து விட்டேன் அல்லது நீக்கிவிட்டேன் என்று சொன்னமாத்திரத்தினுல் மற்றவர்களின பேரில் தொடர்வேன் என்று பலமாய்ச் சொன்னதாக நிதானிக்கவேண்டும், ஆகவே இரண்டாவது ஆக்ஷேபணை பிரயோசனமில்லை.

38 மதராஸ் 178-ல் சீவ் ஜஸ்டிஸ் சர் ஆர் நால்டு ஒயிட் துரையவர்களும் மற்ற இரண்டு ஜட்ஜிமார்களும் Indian Contract Act-ல் ஏற்பட்டிருக்கிற சட்ட நியாயங்கள் இங்கிலீஷ் சட்ட முறைக்கு விரோதமில்லாத பக்ஷத்தில் இங்லீஷ் சட்ட நிய்யாயத்தை ஷை ஆக்டின் விதி

முறைகளில் பிரயோகப்படுத்தலாமென்று தெளிவாய்ச் சொல்லியிருக்கிறார்கள். Contract Act 134-வது பிரிவில் மேற்சொல்லிய இங்கிலீஷ் தீர்மான நியாயத்திற்கு விபரீதமான அம்சம் யாதொன்றும் காணப்படவில்லை, மேற்சொன்னப்படி ஜாமீன்தார்களின் பேரில் தொடரும் பாத்தியத்தை கையிருப்பில் வைத்துக் கொண்டு கடனாளியை விலக்கினால் ஜாமீன்தார்களின் பேரில் தொடரும் பாத்தியதை கெட்டுப் போகாதென்ற "இங்கிலீஷ் சட்ட நியாயமானது Contract Act 134-வது பிரிவின் அம்சத்திற்கு விபரீதமல்ல [ஒரு நிபந்தனையால் 134வது பிரிவின் நியாயத்திற்கு மாறுதலான அம்சம் இங்கிலீஷ் சட்ட நியாயத்தால் ஏற்படுகிறது.]

(1873) L. R. Exct. 81-ல் Contract Act. 134-வது பிரிவின் நியாயம் தர்க்கிக்கப்பட்டிருக்கிறது. வாதி ஜாமீன்தார்களிடமிருந்து கடன் தொகையை வசூலித்த பின் ஜாமீன்தார்கள் கடனாளியிடத்திலிருந்து தாங்கள் செலுத்தின தொகையை வாபீஸ் அடைவதற்குரிய அதிகாரம் கெட்டுப் போகத்தக்கதாக வாதி கடனாளியின்பொறுப்பை இறக்கி விட்டால் ஜாமீன் தாரின் பொருப்பும் அப்பொழுதே நீங்கிப் போகிறதென்று சொல்லப்பட்டு அதற்குகந்தாய் 134-வது சட்டபிரிவானது ஏற்பட்டிருக்கிறது. ஆனால் கடனாளியின் பேரில் தொடர்ந்து வசூலிக்கத்தக்க சிலாக்கியம் கெடாதபடி கடனாளியை விலக்கினால் அவ்வித சந்தர்ப்பத்தில் 134-வது பிரிவின் அம்சத்தை பிரயோகிக்கத் தேவையில்லை. 39 பம்பாய் 52, 14 பம்பாய் 667, இவைகளை பார்க்கவும், Negotiable Instruments Act. 39-வது பிரிவில் மேல் கூறிய இங்கிலீஷ் சட்ட நியாயமானது அங்கிகரிக்கப்பட்டிருக்கிறது. அன்றியும் இந்த கேசில் வாதியாக 1-ம் பிரதிவாதியை விலக்கினதேயொழிய கோர்ட்டார் 1-ம் பிரதிவாதியின் பேரில் டிக்கிரீயளிக்க மறுத்ததாக சொல்லப்பட்டது. இத்தியாதிகாரணங்களை சொல்லி அப்பீல் பிரதிவாதிகளின் பேரில் ஏற்பட்டிருக்கும் டிக்கிரீயை காயப்படுத்தி 2-வது அப்பீலை செலவுடன் தள்ளுபடி செய்தார்கள், இதில் பார்ட்டியாய் (சேர்க்கப்பட்டிருந்த 1-ம் பிரதிவாதியின் செலவைப் பற்றி யாதொரு உத்திரவும் அளிக்கப்படவில்லை (38 M. L. G. 131).

சில தீர்ப்புச் சுறுக்கங்கள்

சீவ்ஜஸ்டிஸ் & கிருஷ்ணன்- J-J.

O. S. A. 56 of 1918—23 பிப்ரவரி 1920

ஸி. பி. ஸி. ஆர்டர் 40 ரூல்-1-ன் வசனபே தங்களின் கருத்தையொட்டி நிறைவேற்றும் கோர்ட்டார் யாதொரு டிக்கிரீ பாக்கிக்காக ஜப்தி செய்யலாயக்கான சொத்துவிஷயமாய் ரிஸீவர் நியமனம்செய்ய அதிகார வரம்புண்டென்று தீர்மான அபிப்பிராயங் கொடுக்கப்பட்டது.

சீவ் ஜஸ்டிஸ் & கிருஷ்ணன்- J-J.

A. S. 370 of 1918-5 ஜனவரி 1920

ஒரு நாட்டுக்கோட்டைச் செட்டியாரின் கடையில் இரண்டுமாதத்தவணைக்கென்று யாதொரு துகையை டிபாஸிட் செய்துவிட்டால் அவ்விரண்டு மாதத்திற்குறிய வட்டிதுகையை அசலுடன் சேர்த்துக் கூடுகிற துகை மொத்தமும் ஒரேடிபாஸிட்டாக மதிக்கப்பட வேண்டுமென்றும் அவ்விதமான டிபாஸிட் துகையை வசூலிப்பதற்கு காலாவதி ஆக்டு 60-வது ஆர்டிகிலின் படி டிமாண்டு செய்த காலமுதல் மூன்று வருஷ வாய்தா உண்டென்றும் வட்டியைச் செலுத்தவேண்டிய கெடுத்தேதிமுதல் மூன்று வருஷ வாய்தா ஏற்பட்டிருக்கிற 63-வது ஆர்டிகிலின்முறையை மேற்படி தாவாவுக்குப் பிறயோகப் படுத்தக்கூடாதென்று—7 L. W. 330-ஐ கவனித்துச் சொல்லப்பட்டது.

இரண்டாவதாக காலஞ்சென்ற கணவனால் விருத்தியம்சத்திற்காகப் போடப்பட்டிருக்கிற துகையிலிருந்து ஏற்படும் வருமானத்தை (லாபத்தை) அப்போதைக்கப்போது பெற்றுக்கொள்ளாமல் மொத்தமாய் அசலுடன் சேரும்படி விட்டதுமல்லாமல் விதவையானவள் தன்னுடைய ஜீவயகாலத்தில் அவ்வித வருமானத்தைத் தன்னுடைய சொந்தமான துகையென்று மதித்துக் கையாடாத சந்தர்ப்பத்தில் அவ்விதவருமானமானது கணவனுடைய எஸ்டேட்டைச் சேர்ந்ததாக அனுமானிக்கப்படவேண்டுமென்று 10 கல்கத்தா 324-ன் பிரிவி கௌன்ஸில் தீர்மானத்தை அனுசரித்துத் தீர்மான அபிப்பிராயங் கொடுக்கப்பட்டது.

சீவ்ஜஸ்டிஸ் & கிருஷ்ணன்-J-J.

S. R. N.o 12758 of 1919-7 ஜனவரி 1920

கெடுவாய்தா கடந்தபின் தாகலான அப்பீலை டிஸ் மிஸ்செய்த அப்பீல் கோர்ட்டார் தாமதத்தை மன்னிக் கத்தக்க காரணங்கள் யாதொன்றும் மில்லையென்று சொல்லி நோடீஸின்பேரில் மேற்கூறிய பாயிண்டைப் பற்றி ஈரங்கி காலத்தில் ஆஜராகியிருந்த எதிரியின் வக்கீல் பீஸுக்காகமுழுபீஸ்தகையில் கால்பங்கு விகி தம் செலுத்தப்படவேண்டுமாய் உத்தாவளித்தார்கள்

சீவ் ஜஸ்டிஸ் & கிருஷ்ணன்-J-J.

A. S. 167 of 1919-8 ஜனவரி 1920.

பூர்வீகமான சொத்துக்களை ஹிந்து தகப்பன் உயில் சாஸனத்தால் செய்த விநியோகமானது தன் மனைவிக்கு ஜீவனும்சார்த்தமாக நியாயமான விநியோக மென்று சொல்லப்பட்டாலும் அவ்வித விநியோகம் புத்திரனைக் கட்டுபடுத்தாதென்று அதாவது புத்திரனு கக்கு அந்த சொத்திலுள்ள ஹக்கு பாத்தியதை நீங்கிப் போகாதென்று- 12 மதராஸ் 490-ன் 492 ஐ அனுசரி த்துத் தீர்மான அபிப்பிராயங் கொடுக்கப்பட்டதும் தவிற 40 மதராஸ் 1122-ன் தீர்மான நியாயத்தின் சந் தர்ப்பம் வேறென்று வித்தியாஸப்படுத்திக் காட்டப்ப ட்டு புத்திரன் மேஜராகி அவ்விநியோகத்திற்கு சம்மதி கொடுத்திருந்தாலும் அல்லது அவர் மைனருக இருந் தால் தாயாருடைய சம்மதி எற்பட்டால் அவ்விதமான விநியோகமானது செல்லுமாவென்ற சந்தேக வினு வும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

சீவ்ஜஸ்டிஸ், ஓல்ட்வீல்டு&சேஷகிரி அய்யர்-J-J

Ref. case 3 of 1919-19 ஜனவரி 1920

ஸ்தாவர சொத்தின் விக்கிறய பத்திரமென்று சொல்லப்பட்ட தஸ்தவேஜில் கிறயமான சொத்து விஷயமாய் முன் அடமானம் முதலிய வில்லங்கம் யாதொன்று மில்லை யென்று உறுதி சொல்லி அதற் காக இதரமான ஒரு சொத்தை ஜாமீனுகக் குறித்தெ ழுதின ஷை ரத்தைக்கொண்டு ஷை தஸ்தாவேஜுக்கு ஜாமீன் ஷை ரத்து விஷயமாய்ப் பிரத்தியேகமான ஸ்டாம்புத் தீர்வை செலுத்தியிருக்க வேண்டுமென்ற ஆட்சேபணை எற்றுக்கொள்ளப் படவில்லை. ஸ்டாம்பு ஆக்டு 5-வது பிரிவின் கருத்தில் வரும்படியாக தாவா தஸ்தவேஜின் அம்சங்கள் இரண்டுவெவ்வேரான நடவ டிக்கைகளாய் மதிக்கத்தகாதென்றும் ஷை ஆக்டு 6-வது பிரிவின்படி இரண்டுவித ஒப்பந்தமும் ஒரே நடவடிக் கையாக மதிக்கப்பட்டு இரண்டில் உயர்ந்த ஸ்டாம்பு செலுத்தவேண்டிய நடவடிக்கையின்பேரில் ஸ்டாம்பு தீர்மான அபிப்பிராயங்கொடுக்கப்பட்டது. 41 மத ராஸ் 469 அனுசரிக்கப்படாமல் 1 மதராஸ்133-ன் தீர் மான நியாயம் ஆதாரங் கொள்ளப்பட்டது.

ஜஸ்டிஸ் ஓல்ட்வீல்டு & சேஷகிரி அய்யர்.

S. A. 953 of 1917—16 மார்ச்சு 1920

மதராஸ் எஸ்டேட்ஸ் லாண்டு ஆக்டு 3 (5)-வது பிரிவின்படி ரெவினியூகோர்ட்டார் (கலக்டரவர்கள்) நடத்தின நடவடிக்கைகளின் வாதியின் பெயரை நில சுவான்தாராகப் பதிவுசெய்து கொள்ள மறுத்ததின் பேரில் வாதி ஸீவில் கோர்ட்டில் தன்னுடைய ஸ்வான் பாத்தியதையை ஸ்தாபிக்கும் பொருட்டு காலாவதி ஆக்டு 14-வது ஆர்டிகிலின்படி ரெவினி யூகோர்ட்டாரின் உத்தரவு தினமுதல் ஒரு வருஷ கெடுவுக்குள் தாவா செய்யவேண்டிய கடமை யில்லையென்று அதாவது காலாவதி ஆக்டு14-வது ஆர்டிகிலின் முறையை இவ்விதமான தாவா வுக்குப் பிரயோகிக்க வேண்டியதில்லை யென்று தீர் மான அபிப்பிராயங் கொடுக்கப்பட்டது.

ஓல்ட்வீல்டு & சேஷகிரி அய்யர்-J-J.

C M S A 20 of 1919 & C R P 145 of 1919—17 மார்ச்சு 1920.

யாதொருதாவாவில் வாதி இறந்தபின் வியாஜ்ஜி யத்தை மேல்நடத்தும் பொருட்டு யாதொருபார்டி தாகல் செய்த அனுமதிவிண்ணப்பத்தை மனுதாருக்கு வாதியின் வியாஜ்ஜிய மூலபாத்தியதை தொடர்ந்துவர வில்லையென்ற காரணத்தால் தள்ளுபடி செய்த உத் தாவின்மீது அப்பீல் செய்ய லாயக்குண்டென்று தீர் மான அபிப்பிராயங் கொடுக்கப்பட்டது.

ஓல்ட்வீல்டு & சேஷகிரி அய்யர்-J-J.

C. M. A. 136 of 1919-18 மார்ச்சு 1920

காலஞ்சென்ற பார்டியின் எஸ்டேட்டைப் பரி பாலனம் பண்ணி வருவதற்காக (Letters of Administration) அதிகாரப் பத்திரம் அடையவேண்டிய தற்காக விண்ணப்பம் கொடுத்ததை ஆட்சேபித்த எதி ரி ஷை அதிகாரம் தனக்கு கிடைக்கவேண்டு மென்று ஆட்சேபணை மிமோவிலேயே வேண்டிக்கொண்ட பிர காரம் கீழ்கோர்ட்டார் விண்ணப்பதாரின் பாத்திய தையை நிராகரித்து எதிரிக்கு அதிகார பத்திரமளித்த

உத்தரவானது இந்தியன் ஸக்ஸஷன் ஆக்டின் (Indian Succession Act) முறையை அனுஷ்டிக்காமல் ஏற்பட்ட ஒரு உத்தரவானதால் அதை சட்ட விரோதமான உத்தரவென்று சொல்லித் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

ஓல்ட்வீல்டு & சேஷகிரி அய்யர் J. J.

S. A. 387 & 839 of 1919—18 மார்ச்சு 1920

டிஸ்டிரிக்டுபோர்டு இஞ்சினியரவர்கள் Local Boards Act 54-வது பிரிவின்படி சர்க்கார் கஜானவில் கட்டியிருக்கிற தொகையிலிருந்து கண்டிராக்டர் செய்து முடித்தவேலைக்காகச் செலுத்தவேண்டிய தொகையைச் செலுத்தும்படி கண்டிராக்டரின் பெயருக்கு ஷை ஆக்டு 145-வது பிரிவின்படி ஏற்பட்டிருக்கிற அச்சுபாரத்தில் (Payment order) அளித்த உத்தரவை கண்டிராக்டர் மற்றொருவருக்கு இண்டார்ஸ் செய்து கொடுத்துத் தொகையை வாங்கிக் கொண்டார் மேடோவர் வாங்கிக் கொண்டவரும் அவ்வித இண்டார்ஸ் மெண்டு செய்யலா மென்று நம்பித் தொகையைக் கொடுத்துவிட்டார். இவ்விதமாய் இண்டார்ஸ் செய்ய லாயக்குள்ள (Bill of Exchange) பில்லாக ஷை உத்தரவை மதிக்கலாமென்றும் (Negotiable Instruments Act) 5-வது பிரிவின் கருத்திலடங்கியதாய் மதிக்கலாமென்றும் தீர்மான அபிப்பிராயங் கொடுக்கப்பட்டது. ஷை ஆக்டின் 3-வது பிரிவின் கருத்துபடி ஸர்காரர் கஜானா ஒரு பாங்கியாக மதிக்கப் படக்கூடாதென்று ஹனரபில் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யரவர்கள் தீர்மான அபிப்பிராயங் கொடுத்தார்கள்.

ஜஸ்டிஸ் அப்துல்ரஹீம் & மோர்-J.

A. S. 291 of 1919-18 மார்ச்ச 1920.

யாதொரு அடமான தஸ்தவேஜியில் ஈடுகாட்டப்பட்ட சொத்துக்களிருக்கப்பட்ட இலாகாவில் ரெஜிஸ்டர் செய்வதற்கு சவுகரியப்படாமல் ரெஜிஸ்டர் செய்யும்சவுகரியத்திற்காக அடமானதாருக்குச் சொந்தமான யாதொருசொத்தை தஸ்தவேஜில் சேர்த்துக் காட்டின காரணத்தால் தஸ்தவேஜானது அவ்விதமாய் ரெஜிஸ்டரான நிமித்தத்தால் செல்லாதென்று தீர்மானிக்கப் படக்கூடாதென்று சொல்லப்பட்டு 41-கல்கத்தா 972-ல் காணப்பட்டிருக்கிற ப்ரிவி கௌன்ஸில் தீர்மானத்தின் சந்தர்ப்பம் வேராகுமென்று வித்தியாஸப் படுத்திக்காட்டப்பட்டது.

சதாசிவய்யர் & ஸ்பென்ஸர்-J-J.

S. A. 2123 to 2139 of 1919—20 மார்ச்சு 1920

ரெவினியூகோர்ட்டாருடைய அதிகார வரம்பில் மட்டும் அடங்கியதான ஒரு வியவகாரத்தில் தீர்மானிக்கப் படவேண்டியதான யாதொரு பாயிண்டைப்பற்றி ஷை கோர்ட்டார் அளித்த யாதொரு தீர்மானம் பின்னால் அதேபார்ட்டிகள் அதேபாயிண்டைப்பற்றிஸீவில் கோர்ட்டில் தாவா செய்வதற்கு லாயக்கில்லாத முடிவான பைசலாக மதிக்கப்படக்கூடாதென்று 26 அலகபாத் 468-ன் தீர்மான அபிப்பிராயத்தைக் குறித்துக் காட்டி சொல்லப்பட்டது.

சதாசிவய்யர் & ஸ்பென்ஸர்—J-J

S. A. 720 of 1919-9மார்ச்சு1920.

யாதொரு மைனருக்காகத் தகப்பன் மீது பாக வியாஜ்ஜியம் தொடுக்கவேண்டுமானால் தகப்பன் அந்த மைனருக்கு கார்டியனைத் தொடர்ந்திருக்க யோக்கியமில்லாமல் நடந்துகொண்ட சந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருக்க வேண்டுமென்றும் அவ்வித சந்தர்ப்பமில்லாவிடில் தகப்பனுக்கும் மைனர் மகனுக்கும் பாகப்பிரிவினை ஏற்படநியாயமில்லை என்றதுபோலும் இந்தகேஸில் தீர்மான அபிப்பிராயங் கொடுக்கப்பட்டது.

அப்துல்ரஹீம் & மோர்-J-J-

A. S. No 305 of 1918-9 மார்ச்சு1920

யாதொருகூட்டுக் கம்பெனியின் பங்காளிகளில் ஒருவர் மற்றவர்களுடைய அனுமதியன்னியில் தன் மீது எதிரியாகிய அந்நியர் ஒருவர் கொண்டுவந்த வியாஜ்ஜியத்தில கம்பெனியைக் கட்டுப்படுத்தும் படியாக மத்தியஸ்தர்களுடைய தீர்மானத்திற்குச் சம்மதிகொடுக்க லாயக்கில்லையென்று தீர்மான அபிப்பிராயங் கொடுக்கப்பட்டும் கம்பெனியைக் கட்டுப்படுத்தும் படியாகத் தான் தனிமையாக பஞ்சாயத்துக் குடன்படலாமென்றுநம்பி நடந்த பங்காளியானவன் அவார்டின்படி தான் செலுத்தவேண்டிய தொகைகளுக்கு மற்ற பாகஸ்தர்களும் பங்குதரவேண்டுமென்று பின்னால் செய்யும் (Contribution) தாவாவில் மற்ற பாகஸ்தர்களும் பஞ்சாயத்தாருடைய அவார்டுக்குக் கட்டுபடவேண்டியதென்று தீர்மானிக்கப்பட்டது. 27 M. L. J. 292-குறித்துக்காட்டப்பட்டது.

சீவ்ஜஸ்டிஸ், ஓல்ட்வீல்டு & சேஷகிரிஅய்யர்-J-J.

S. A. 146 of 1919-11 மார்ச்சு 1920

ப்ராபர்டி ஆக்டு 60-வது பிரிவின்படி அடமான தாரன் துகைசெலுத்தவேண்டிய கெடுவாய்தாவுக்குப் பின்துகையைச் செலுத்திவிட்டு அடமான சொத்தைத் தன்வசப்படுத்திக்கொள்ளவும் மற்றவிதமாய் அடமான வில்லங்கத்தை ரத்து செய்துகொள்ளவும் லாயக்குள்ளவராகும். 98-வது பிரிவின்படி யாதொரு அடமான தஸ்தவேஜானது பந்தகமல்லாத அடமானம் விக்கிறய உடன்படிக்கையுடன் கூடிய அடமானம், ஒத்தி அல்லது இங்கிலீஷ் அடமானம், ஆகிய மூன்றுவகையல்லாத அடமான தஸ்தவேஜாகவும் அல்லது மேற்கூறிய மூன்றுவகையில் (1) ம்-3 (4) சேர்ந்தாகிலும் (2)-(3) ம் சேர்ந்தாகிலும் ஏற்பட்டதான தஸ்தவேஜாகவும் எழுதப்பட்டிருந்தால் அவ்வித விபரீதமான தஸ்தவேஜில் எவ்விதமான நிபந்தனைகள் ஒப்புக்கொள்ளப்பட்டிருக் கின்றனவோ அதேபிரகாரம் பாத்தியாபாத்தியதைகள் நிர்ணயிக்கப்படவேண்டும்.

தாவாதஸ்தவேஜின் வசனங்களைகவனித்தால் பந்தகம் ஒத்தி ஆகிய இரண்டுவகையான கருத்துடைய தஸ்தவேஜாய்த் துலங்குவதலால் 98-வது பிரிவில் காணப்பட்ட விபரீதமான அடமான தஸ்தவேஜாகச் சொல்லத்தகாதென்றும் ஆகவே 98-வது பிரிவின் நியாயத்தைப் பிரயோகித்து தஸ்தவேஜின் ஷரத்துகளின்பேரில் யாதொருபரிகாரம் ஏற்படவேண்டியதில்லையென்றும் 60-வது பிரிவின்படியுள்ள பொதுவான பாத்தியதையைக் கொண்டாடி அடமானத்தை மீட்டுக்கொள்ளத் தகுமென்றும் தீர்மான அபிப்பிராயங் கொடுக்கப்பட்டது.

அப்துல்ரஹீம் & மோர்-J-J

A. S. 214 of 1919-11 மார்ச்சு 1920

பிர்ம்ஹசமாஜ முறைப்படிக்கு விவாகம் செய்துகொண்ட ஒரு ஹிந்து ஸ்திரீயின் ஸ்ரீதன சொத்துக்கள் கணவனுடைய பந்துவரிசைக்குச் செல்லுமேயொழிய ஷெ யாளுடைய சகோதரிகளுக்கும் சகோதரிகளின் மக்களுக்கும் சேராதென்று தீர்மானஅபிப்பிராயங் கொடுக்கப்பட்டது. 36 மதராஸ் 116, 37 மதராஸ் 293, 42 கல்கத்தா 384-ன் பிரிவி கௌன்வில் கேஸ் இவைகளை பார்க்கவும்.

சீவ்ஜஸ்டிஸ், ஓல்ட்வீல்டு & சேஷகிரிஅய்யர்J-J

L. P. A. 31 of 1919-3 பிப்ரவரி 1920

குத்தகைதாரன் தன்னுடைய குத்தகை அனுபோகபாத்தியதையைப் பாரதீனப் படுத்தக்கூடாதென்ற நிபந்தனை குத்தகை தஸ்தாவேஜில் கண்டிருந்தபோதிலும் அதைமீறி நடந்தால் சொந்தக்காரன்சொத்தில் பிரவேசித்து சுவாதீன படுத்திக்கொள்ளத்தக்கதானபரிகாரமுறை அதில் குறிக்கப்படாத சந்தர்ப்பத்தில் குத்தகைதாரன் தன்னுடைய பாத்தியதையை மற்றொருவனுக்கு மேடோவர் செய்துவிட்டபிறகு அதற்குமுன் தீர்வைபாக்கிக்காக ஏற்பட்ட டிக்கிரீயை நிறைவேற்றினதில் குத்தகைதாரனுடைய குத்தகை பாத்தியதையை ஏலத்திற்குக் கொண்டுவந்தார். குத்தகை பாத்தியதையானது வேறொருவருக்குமேடோவர் செய்யப்பட்டமையால் அதன் மேல் தொடர நியாயமில்லையென்றும் மேடோவர் பெற்றவர் குத்தகை சொத்தின் சுவாதீன அனுபோகத்தில் தொடர்ந்து வர லாயக்குண்டென்றும் தீர்மான அபிப்பிராயங் கொடுக்கப்பட்டது.

சீவ்ஜஸ்டிஸ், ஓல்ட்வீல்டு & சேஷகிரிஅய்யர்-J-J

C. R. P. 155 of 1919-23 பிப்ரவரி 1920

மாகாண ஸ்மால்காஸ்கோர்ட் ஆக்டு 17-வது பிரிவின் நிபந்தனை விதியின்படி எக்ஸ்பார்ட்டியாக அளிக்கப்பட்ட டிக்கிரீயை ரத்துசெய்து எதிர்கட்சியை ஈரங்கி கேட்டுப் பைசலளிக்கவேணுமாய் விண்ணப்பம் கொடுக்கும் பட்சத்தில் அதற்கென்று குறிக்கப்பட்ட காலத்தவணைக்குள் ஜாமீன்கொடுக்கவேண்டியது கட்டாய முறையாகுமென்றும் கோர்ட்டாருடைய யுக்தானுஸாரத்தைப் பொருத்த நடவடிக்கையல்லவென்றும் 32 கல்கத்தா 339-ஐ அனுசரித்தும் 13 மதராஸ் 178-ஐ நிராகரித்தும் தீர்மான அபிப்பிராயங் கொடுக்கப்பட்டது.

சீவ்ஜஸ்டிஸ் & கிருஷ்ணன்-J.

A. S. 416 of 1918-24 பிப்ரவரி 1920

பிரிட்டிஷ் இலாகாவிலுள்ள சிலசொத்துகள் விஷயமாயும் திருவாங்கூர் சமஸ்தானத்திலுள்ள சில சொத்துகளின் விஷயமாயும் ஏற்பட்ட யாதொருபாகப் பிரிவினைப்பத்திரமானது பிரிட்டிஷ் இலாகவில் ரெஜிஸ்டராகதபட்சத்தில் பிரிட்டிஷ் கோர்ட்டுகளில் உள்ள சொத்துகளின் விஷயமாய் ருஜுவு அம்சத்திற்காக ஏற்றுக்கொள்ளத்தகாதென்று தீர்மான அபிப்பிராயங் கொடுக்கப்பட்டது.

ஏயிலிங் & கூட்ஸ் டிராட்டர் J. J.

S. A. 672 of 1919-23 பிப்ரவரி 1920

தாஸியானவள் வேசித்தனத்திற்குத் தயார் செய்யும்பொருட்டு யாதொருபெண்ணை ஸ்வீகாரமெடுத்துக் கொண்டால் அவ்வித ஸ்வீகாரம் சட்ட விரோதமான செல்லத்தகாத நடவடிக்கையாகுமென்று தீர்மான அபிப்பிராயங் கொடுக்கப்பட்டது.

சீவ்ஜஸ்டிஸ் & கிருஷ்ணன்-J.

O. S. A. 14 of 1919-2 மார்ச்சு 1920

காலஞ்சென்ற மகமதியனுடைய சொத்துகளைப் பொருத்து டிக்கிரீயடைந்த பாக்கிதார்கள் ஷை சொத்துக்களை ஜப்திசெய்த கையோடு ஷையாருடைய மகன் பேரில் ஏற்பட்டிருக்கிற வெண்ணலை டிக்கிரீயை நிறை வேற்றி அதே சொத்துக்களை ஜப்திசெய்தால் ஸி. பி. ஸி. 73-வது பிரிவின்படி தகப்பனுடைய பாக்கிதார்களுக்குச் சேரவேண்டிய தொகை செலுத்தப்பட்டபிறகு மிகுதியிருந்தால் மட்டும் மகனுடைய கடனுக்காகப் பிரயோகப்படுத்தலாமென்று இந்தக்கேஸில் தீர்மான அபிப்பிராயங் கொடுக்கப்பட்டது.

கடன் துன்மார்க்க வினியோகத்திற்காக இருக்கலாம், அல்லது, சாதாரண கடனுயிருக்கலாம்.

கடன்வைத்துவிட்டுப் போகிறதந்தை அதுடன் ஆஸ்தியும் வைத்துப் போயிருந்தால்தான், கடன்காரர்கள் அக்கடனை அவன்பிள்ளை அல்லது மற்ற வார்சுகளிடமிருந்து வசூல் செய்யலாம் என்பதைச் சென்ற உபந்நியாசத்தில் சொன்னேம். எனவே, தந்தையின் ஆஸ்தி பிள்ளையின் கைக்கு வராமல் போனல், பிள்ளை தந்தைபட்டகடனைக் கொடுக்கவேண்டாம். மேலும் தந்தை துன்மார்க்க அக்கிரம வினியோகங்களில் கடன் பட்டு இறப்பானுனல், அத்தந்தையின் ஆஸ்தி பிள்ளையின்கைக்கு வந்திருந்தால்கூட அவ்வித 'அவ் வியவகார' க்கடனைத்திருப்பிக் கொடுக்கப் பிள்ளை கடமைபட்டவனல்ல. ஹிந்துதர்மசாஸ்திரத்தில் விராஹஸ்பதி என்பவர், "லாகிரிவஸ்துக்கள் வாங்குவதிலோ, சூதாட்டத்திலோ, பிரதிபலனில்லாமல் வாக்களித்தோ, ஜாமீன் நின்றே, அபாராதம் கொடுக்கவேண்டியோ, சுங்கம் கொடுக்கவேண்டியோ, தகப்பன் கடன் படுவானுனல், மகன் அவைகளைக் கொடுக்கவேண்டியதில்லை" என்று சொல்லியிருக்கிறர். இவ்விதியையும் இதுபோன்ற மற்ற சாஸ்திரவிதிகளையும் அனுசரித்து, ஒழுங்கு தப்பி நடந்து அதனல் தகப்பன்கடன்பட்டு இறப்பானுனல், அக்கடனை பிள்ளை அடைக்கவேண்டிய நியாயமில்லை என்று இந்திய ஹைகோர்ட்டார்கள் தீர்மானம் பண்ணி இருக்கிறர்கள். இம்மாதிரியான ஒழுங்குதப்பி உண்டான கடன்களைத்தான் சமஸ்கிருதநூல்கள் 'அவ்வியவகார' கடன்களென்று அழைக்கின்றன.

இனி, உதாரணங்களாக, எந்த எந்த சந்தர்ப்பங்களில் தந்தைபட்டகடன் துன்மார்க்க அவ்வியவகாரக் கடன்களென்றும், எந்த எந்த சந்தர்பங்களில் அவை நியாயமான கடன்களென்றும், இந்திய ஹைகோர்ட்டுகள் தீர்ப்பு சொல்லி இருக்கின்றனவென்று பார்ப்போம்.

(1) குடி, கூத்தி, சூதாட்டம் முதலிய விஷயங்களுக்காக வாங்கியகடன் மகனை கட்டுப்படுத்தாது.

(2) தந்தைசெய்த குற்றத்திற்குத் தண்டனையாக விதிக்கப்பட்ட அபராதமோ அல்லது அந்த அபராதத்தைக் கட்டுவதற்காக வாங்கின சடனே மகனைப் பாதிக்காது.

(3) அக்கிரம அநியாய வியாஜ்யங்களாடி அவ்விதம் வழக்குக் கொண்டுவந்ததற்கு அபராதமாக செலவுதொகை கொடுக்க வேண்டி நேர்ந்தால், அதைக்கொடுக்க மகன் கட்டுப்பட்டவனல்ல.

(உதாரணம்) தன்பிள்ளையை மற்றெருவன் ஸ்வீகாரம் கொண்டதாக, பாபர் ஸூட்டாய் வழக்காட அந்தகேஸ் பொய் என்றும், பொய் கேஸ் வீணிற்குக்கொண்டு வந்ததற்கபராதமாக கவர்மண்ட் செலவையும் கொடுக்க வேண்டுமென்று கோர்ட் தீர்மானம் பண்ணினபோது, தகப்பன் ஆடிய வீண் வழக்கிற்கு ஒரு அபராதமாக அந்த செலவு கொடுக்கவேண்டி நேர்ந்த

தென்றும், ஆனதால் அது அவ்வியவகாரக் கடனென்றும், அதைப் பிள்ளையினிடமிருந்து வசூல் பண்ணமுடியாதென்றும் மெட்ராஸ் ஹைகோர்ட்டு தீர்ப்பு சொல்லி இருக்கிறது.

(4) சட்டவிரோதமாயில்லாமற் போனாலும் அக்கிரம காரியத்தால் தகப்பன் விளைவித்துக் கொள்கிற நஷ்டத்திற்கு மகன் உட்பட வேண்டியதில்லை.

(உதாரணம்) ஒருவன் அடுத்தவயலிற்கு நீர் பாயாமல் தடைபண்ண, அடுத்தவயல்காரன் நஷ்டத்திற்குக்கேஸ்போட்டு டிக்ரிவாங்கி, அதை நிறைவேற்றுவதற்கு முன்னால், முன்னவன் இறந்துவிட; நீர்பாயாமல் தடைபண்ணினது அக்கிரமமானபடியினால், அந்தடிக்ரியை அவன் பிள்ளையின்பேரில் நிறைவேற்ற முடியாதென்றும் பம்பாய் ஹைகோர்ட் தீர்ப்பு சொல்லியிருக்கிறது.

(5) ஒருவன் இலஞ்சம் கொடுத்துத் தன் பிள்ளையை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளும்படி ஒரு விதவையைச் செய்துவைத்தான். இந்த இலஞ்சம் கொடுப்பதற்காக வாங்கின கடன் நியாய விரோதமானபடியினால் அக்கடனை மகன் கொடுக்கக் கட்டுப்பட்டவனல்ல.

இத்தகைய அவ்வியவகாரக்கடன்கள் போக மற்றப்படி; வைதீக, விவாக, வியாபார விவகார விஷயங்களில் தகப்பன் பட்ட கடனை மகன் கொடுத்தே தீரவேண்டுமென்று ஏற்படுகிறது. தகப்பன் வாங்கும் கடன், பிள்ளைகளைக் கட்டுப்படுத்தக்குடும்ப சம்ரக்ஷணார்த்தமாய்த்தான் இருக்கவேண்டுமென்கிற அவசியமில்லை. துர்மார்க்க அயோக்கிய கடன்களாயில்லாவிட்டால், தகப்பனது ஆஸ்தியை எடுத்துக்கொள்ளும், பிள்ளைகள், அந்த கடன்களைக் கொடுத்தேதீரவேண்டும்.

தகப்பன் ஜாமீனாயிருந்து அது சம்மந்தமாக கடனானாலும் சரி அல்லது ஜாமீனாயிருந்தால் நஷ்டத்தைக் கட்டிக்கொடுத்துவந்தாலும் சரி, அந்தக் கடனாவது, ஜாமீனாவது மகனைக் கட்டுப்படுத்துமா வென்பதைக் கவனிக்கவேண்டும். ஹிந்து சட்டப்பிரகாரம் தகப்பன் ஜாமீன் நின்ற கடனைப் புத்திரன் அடைக்கவேண்டும். ஆனால் பௌத்திரனோ, பிரதிபலனில்லாத ஜாமீனாயிருந்தால், அதற்குக் கட்டுப்படமாட்டான். பம்பாய், அலகாபாத், மெட்ராஸ் ஹைகோர்ட்டுகளெல்லாம் இதே அபிப்பிராயம் கொண்டிருக்கின்றன. கல்கத்தா ஹைகோர்ட் மாத்திரம், இவ்விஷயத்தில் சந்தேகத்திற்கிடமாய் ஒரு தீர்ப்பு சொல்லியிருக்கிறது. தந்தை, வேறொருவன் ஆஜராவதற்கோ, அவனது யோக்கியதைக்கோ, அல்லது அவன் வாங்கிக்கொண்ட கடனிற்கோ ஜாமீனாயிருந்திருக்கலாம். முன்னது இரண்டிற்கும் தந்தை மாத்திரம் தான் கட்டுப்படுவான். மூன்றாம் வகை ஜாமீனிற்குத் தான் பிள்ளையும் கட்டுப்படவேண்டும். பிரதிபலன் இல்லாவிட்டால் அதற்கும் கூட பேரன் கட்டுப்படமாட்டான். பிரஹஸ்பதி, வியாசர், விஷ்ணு ஆகிய ரிஷிகள் இப்படித்தான் விதித்திருக்கிறார்கள்.

தகப்பன் பிறரை மோசம்பண்ணி பணத்தை அபகரித்திருந்தால், மகன் அந்தப் பணத்தைத்திருப்பிக் கொடுக்கவேண்டுமோ என்கிற சந்தேகம் உண்டாகலாம். இதில் கவனிக்க வேண்டியது ஒரு சிறு விஷயமே. தகப்பன் ஆரம்பம்முதல் மோச எண்ணத்துடனேயே பணத்தைக்கொண்டு அதை அபகரித்திருப்பானானால், மகன் அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுக்கவேண்டாம். அப்படி இல்லாமல் சாதாரணமாய் தன்கைக்கு வந்த பணத்தைச் செலவு செய்து விட்டுக் கொடுக்கமுடியாமல், போய்விட்டால் மகன் அந்தப் பணத்தை அடைக்கவேண்டும். அதாவது பணத்தை அபகரித்தது கிரிமனலா இருக்குமானால் மகனைப் பாதிக்காது. கிரிமனலில் போகவழியில்லாத ஸிவில் கேஸாய்த்தான் போகுமானால் மகனைப்பாதிக்கும்.

மதராஸ் ஹைகோர்ட் தீர்மானங்கள்.

சேஷகிரி அய்யர் & மோர் J.J.

(தஞ்சாவூர் ஜில்லா)

S. A. 2096 of 1918-5 செப்டம்பர், 1919

தஞ்சாவூர் லைப் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி

VS

குப்பண்ணாவ்

குப்பண்ணாவ் என்றவாதியின் தாயார் நாகம்மாள் தஞ்சாவூர் மரணபண்டில் மாதம் ரூபாய் ஒன்று விகிதம் 15 வருஷங்கள் மட்டும் அல்லது மரணபரியந்தம் கட்டிவருவதாய் ஒப்புக்கொண்டு ஷை கம்பெனியாரால் ஏற்பட்டிருக்கிற பிரதிப்பிரயோஜனத்தை குறிக்கக்காட்டிய பாலிஸி ஒன்றை 1906, மே 29-ல் பெற்றனள். அதுமுதல் 61 மாதங்கள் மட்டும் ரூபாய் ஒன்றுவிகிதம் பிரீமியம் கட்டிவிட்டு அதாவது 1911 மேவரையில் செலுததிவந்து அதற்குப்பின் கட்டாமல் நிறுத்தி 1914 ஏப்ரல் 6ல் மரித்தனள். வாதி 1917 ஏப்ரல் 11-ல் தன் தாயாரால் கட்டப்பட்டிருந்த தொகையைமட்டும் வாபீஸ் அடைய வேண்டுமென்று கம்பெனியாரின்மீது டி-மு கோர்ட்டில் தாவாசெய்ததில் டி-மு கோர்ட்டார் பாலிசிபிறந்தபின் ஏற்பட்டிருந்த ஒரு புதிய முறைப்படி மரணபர்யந்தம் மாதக்கட்டணம் செலுத்தி வரப்பட வேண்டுமென்ற முறைக்கு விரோதமாய் வாதியின்தாய் நடக்கத்தவறினமையால் வாதிக்கு ஷைபாலிஸியை அநுஸரித்து கம்பெனியின் மீது எவ்வித பரிகாரமும் அடையத்தகாதென்று சொல்லி டி-மு கோர்ட்டார் வாதியின் பரிகாரத்தைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அப்பீலில் சப்கோர்ட்டார் மாறுன அபிப்பிராயம் கொண்டு வாதியின் தாயாரால் செலுத்தப் பட்டிருந்த தொகை முழுதையும் கம்பெனியார் வாதிக்கு வாபீஸ் செய்யவேண்டியதென்று தீர்மானித்து வாதிக்கு அனுகூலமாய் டிக்கிரி அளித்தார்கள். கம்பெனியார் ஹைகோர்டில் இரண்டாவது அப்பீல் செய்ததில் சப்கோர்ட் தீர்மானம் காயமென்று சொல்லப்பட்டு கம்பெனிக்கு விரோதமாய் 2-வது அப்பீல செலவுடன் தள்ளுபடியாச்சுது ஹைகோர்ட்தீர்ப்பின் காரணச் சுருக்கமாவது:—

பாலிசி ஏற்பட்டகாலத்தில் ஒரு மெம்பர் 15 வருஷங்கள் முடியுமட்டும் மாதக்கட்டணம் செலுத்தி வருவதற்குபதிலாக 60 மாதக்கட்டணத்தை மொத்தமாய் செலுத்தி பின்னல் மாதக்கட்டணத்தை கட்ட வேண்டியதில்லையென்ற ஒரு விதிமுறை ஏற்பட்டிருந்தது. அந்தப்படி வாதியின்தாயார் 60 மாதசந்தாவை செலுத்திவிட்டமையால் அதற்குப்பின்னிட்டு பிரீமியம் செலுத்தாமல் நிறுத்திவிட்ட நடத்தையானது பாலிஸியை வியர்த்தமாககாதென்று சொல்லவேண்டும். மாதக்கட்டணம் கட்டிவரும்படியான மெம்பர்களுக்கு வருஷம் ரூபாய் 6 விகிதமாக வட்டி லாபம் செலுத்தி வரப்படுகிற ஓர்முறை யிருப்பதால் அது விஷயமாய் 61 மாதங்களுக்குப் பின்னுள்ளகாலத்திற்கு வட்டி கிடையாதென்று கம்பெனியின் காரியதரிசியார் வாதியின் தாயாருக்கு எழுத்துமூலமாய் தெரிவித்திருக்கிறார்கள். அச்கடிதங்கள் இந்தக் கேசில் தாகலாகியிருக்கின்றன. வட்டிகிடையாதென்று தெரிவித்தார்களேயொழிய பின்னல் ஏற்பட்ட ஒரு நூதனவிதி முறையைகாட்டி பிரமியம் கட்டதவறிப்போன காரணத்தால் பாலிசி வியர்த்தமாய் போய்விட்டதென்ற சமாசாரங்கள் ஷை கடிதங்களில் குறித்தவிதமும் புலப்படவில்லை. பாலிசி பிறந்ததினத்திற்குப் பிறகு கம்பெனியில் ஸ்தாவரநிலமையை கருதி ஏற்பட்ட புதிய ரூலுன் தகவல் வாதியின் தாய்க்கு தெரியாதாகையால் அந்த விதி முறை ஷையாளை கட்டுப்படுத்தாது என்று சொல்லவேண்டும். ஷையான் கம்பெனியில் சேரும் பொழுது பின்னல் ஏற்படக்கூடிய ரூல்களுக்கும் தான் உடன்படுவதாக ஒப்புக்கொண்ட வசனங்கள் ரிகார்டில் காணப்படவில்லை. பார்டிக்கு தெரியாமல் கம்பெனியார் ஏற்படுத்திக்கொண்ட விதி மாறுதல் பார்டியை கட்டுப்படுத்தாது. ஆகையால் பாலிசி ஏற்பட்டகாலத்தில் நமோதிலிருந்த நிபந்தனையின்படி 60 மாத கட்டணத்தை செலுத்தப்பட்டிருக்கிற காரணத்தால் வாதிக்கு அப்பாலிசியை ஒட்டிசெலுத்தப்பட்டிருந்த பிரிமியம் வாபீஸ் கொடுக்கப்பட வேண்டியதென்று தீர்மான அபிப்பிராயம் கொடுக்கப்பட்டது.

இந்தகேசில் பிரிமியத்தை கம்பெனியில் வாபீஸ் கொடுக்கவேண்டிய பற்பல சந்தர்பங்களும் அது விஷயமான சட்டநிலமையும் அதாரிடிகளும் பலவாறுக எடுத்துக் காட்டப் பட்டன. சப்கோர்ட்டார் கண்டிராக்ட் ஆக்ட் 65 வது பிரிவின் நியாயத்தை காரணமாகச் சொல்லி வாதிக்கனுகூலமாக டிக்கிரி அளித்திருக்கிறார்கள், அதாவது பாலிசியின் ஒப்பந்தம் நிஷ்பிரயோஜனமாய் போய்விட்டால் அதையிட்டு அட்வான்சு பண்ணியதுகை வாபீஸ் செலுத்தப்படவேண்டுமென்ற நியாயத்தை சப்கோர்ட்டார் கவனம் கொண்டிருக்கிறார்கள். ஹைகோர்ட்டாரோ பாலிசி ஏற்பட்டகாலத்தில் நமோதிலிருந்த விதியின்படியே வாதிக்கு கட்டப்பட்டதொகை வாபீஸ் செலுத்தப்பட வேண்டுமென்ற ஞாயத்தை அனுசரித்து டிக்கிரி அளித்திருக்கிறார்கள். 38 M. L.J. 135

ஸ்பேன்சர் & கிருஷ்ணன்- J-J.

(நெல்லூர் ஜில்லா)

S. A. 1791 of 1918-26 ஸெப்டம்பர் 1920

தங்குத்தூர் நரசிம்மம் vs ஸிங்கராஜு ராமையா.

1894-ம் வருஷத்திய II-வது ஆக்ட் என்ற (Madras Proprietory Estates Village Service Act)-ன் 15-வது பிரிவின்படி யாதொரு எஸ்டேட்டை சேர்ந்த கிருமங்களுக்கு நூதனமாய் கிராமஉத்தியோகஸ்தர்களை ஏற்படுத்தவேண்டுமானால் அவ்வித உத்தியோகம் ஏற்படுத்தப்பட்ட காலமுதல் அல்லது அதுவிஷயமாய் ஜில்லா கலெக்டர்வர்கள் விளம்பரம் செய்ததேதிமுதல் 6-வாரங்களுக்குள்ளாக நிலச்சுவான்தார்கள் தங்களுக்கு இஷ்டமான பேர்வழியை அவ்வுத்தியோகத்திற்கு என்று தெரிந்து எடுத்து நாமிநேஷன் ஜாபிதாவில் குறித்து ரெவினியூ அதிகாரிகளுக்கு எழுதி அனுப்பவேண்டும். அப்புள்ளிகளின் நியமனத்தைப்பற்றி யாதொரு ஆக்ஷேபனையும் ஏற்படாதவிஷயத்தில் அவர்களையே நியமிக்க வேண்டியது ரெவினியூ அதிகாரிகளின் கடமையாகும். அப்படிப்பட்ட யாதாய்து குறித்தகாலத்திற்குள் அனுப்பப்படாத விஷயத்தில் கவர்ன்மெண்டார் தாங்களுக்கு இஷ்டமான நபரை அவ்வுத்தியோகங்களுக்கு நியமனம் செய்துவிடலாம். சட்டவிதி இப்படிஇருக்க நெல்லூர்ஜில்லா காவாலியைச்சேர்ந்த பிஞ்சாமூர் கிராமத்திற்கு கர்ணம் உத்தியோகத்தை ஏற்படுத்தி அதற்காக யாதொருபுள்ளியை நியமனம் செய்யவேண்டுமென்று அல்லது சிபார்சு செய்ய வேண்டுமென்று டிப்டிகலெக்டிரின் உத்திரவுப்படியென்று சொல்லி உதயகிரி தாசில்தாரவர்கள் நிலச்சுவான்தாருக்கு நோடீஸ் அனுப்பினதின்பேரில் நிலச்சுவான்தார் அது கிடைத்த 6 வாரங்களுன் 1-ம் பிரதிவாதியை ஷை உத்தியோகத்திற்கென்று நியமனம் செய்ய வேண்டுமென்று அபேக்ஷிப்பதாக ஒரு மிமோ டிப்டிகலெக்டருக்கு எழுதி அனுப்பித்தார்கள். அதில் நிலச்சுவான்தாரின் பவர்பெற்ற எஜண்டவர்கள் எஜமானுக்காகவென்று கையொப்பமிட்டிருந்தது. அதற்குப்பின் ஜில்லாகலெக்டவர்கள் நிலச்சுவான் தார்களுக்கு ஓர் அறிக்கையநுப்பி ஷை கிராமத்திற்கு நியமனமாகவேண்டியகர்ணம் உத்தியோகத்திற்கு யாதொருபுள்ளியை சிபார்சு செய்தனுப்ப வேண்டுமென்று கட்டளையிட்டார்கள். நிலச்சுவான்தார் 2-வது நோடீஸ் கிடைத்தவுடன் புதியவோர் மிமோவில் தாங்கள் முந்தியே முதல் பிரதிவாதியை சிபார்சு செய்தனுப் பியிருப்பதாகவும் அதில் தங்கள் எஜண்டு தங்கள் அனுமதியின் பேரிலேயே தங்களுக்காக கையொப்பமிட்டு தந்தி மூலமாயும் தபால்மூலமாகவும் தெரியப்படுத்தியிருக்கிறதாகச் சொல்லி அதைத்திரும்பவும் காயப்படுத்தி அதேபேர்வழியை நியமனம் செய்யவேண்டுமென்றே இரண்டாவதான மிமோஎழுதி தாங்களே கையொப்பமிட்டு அனுப்பினார்கள். டிப்டிகலெக்டவர்கள் முதவில் அனுப்பப்பட்டிருந்த சிபார்சி மிமோவில் எஜண்ட்கையொப்ப மிட்டிருந்ததால் இவ்வித மிமோவில் எஜமான் தன்னுடைய அதிகாரத்தை ஏஜண்ட்மூலமாய் செலுத்தக் கூடாதென்று விதிமுறை ஏற்பட்டிருந்ததால் அந்தசிபாரிசியை அவமதித்து தனக்கிஷ்டமான புள்ளியாகிய வாதியை அவ்வுத்தியோகத்திற்கு நியமனம் செய்துவிட்டார்கள். அப்பீலில் ஜில்லாகலெக்டரவர்கள் டிப்டிகலெக்டரால் ஏற்பட்ட வாதியின் நியமனத்தை ரத்துசெய்து நிலச்சுதான்தாரினால் சிபார்சு செய்யப்பட்டிருந்த 1-ம் பிரதிவாதியை நியமனம் செய்து விட்டார்கள், ரெவினியூ போர்டாரும் அதை காயப்படுத்தியிருக்கிறார்கள். அதன்பேரில் வாதி காவாலி டி-மு கோர்ட்டில் அசல்தாவா செய்து தன்னுடைய நியமனத்தை ஸ்திரப்படுத்த வேணுமென்று டிக்லேரேஷன் தீர்மானமடையக் கோரினார்கள். டி-மு கோர்ட்டாரும் அப்பீலில் சப்கோர்ட்டாரும் ஒரே அபிப்பிராயமாய் வாதியின் நியமனத்தை அங்கீகரித்து டிக்ரீயளித்தார்கள். ஹைகோர்ட்டார் 2-வது அப்பீலில் கீழ்கோர்ட்டார் தீர்ப்புகளை ஏற்றுக்கொள்ளாமல் நிலச்சுவான்தார் 1-ம் பிரதிவாதியை சிபார்சுசெய்த முறையானது சட்டவிரோதமல்லவென்றும் அதைப்பற்றிய எதிராட்சேபனைகள் பிரயோஜன மற்றவைகளென்றும் சொல்லி அவ்வுத்தியோகத்திற்கு 1-ம் பிரதிவாதியை நியமனம் செய்யவேண்டியதென்று தீர்மானமளித்தார்கள். ஹைகோர்ட் தீர்ப்பின் காரணச் சுருக்கமாவது:—

வாதியின் நியமனம் சட்டவிரோதமானதா அல்லவாஎன்று தீர்மானிக்கவேண்டியது கோர்ட்டாரின் கடமையாகும். அதைப்பற்றிய ருஜூபாரம் வாதியைப் பொறுத்ததாகும். நிலச்சுவான்தார் குறித்தவாய்தாவுக்குள் சிபார்சு மிமோ அநுப்பத் தவறியிருந்தால் மட்டும் வாதியை டிப்டிகலெக்டர் நியமித்தது ஞாயமாகும். நூதனஉத்தியோகத்தை ஏற்படுத்துவதற்காக 6-வது பிரிவில் பற்பல முறைகள் அனுஷ்டிக்கப்பட வேண்டிதாய் சொல்லப்பட்டிருக்கிறது. ரெவினியூ போர்டாரின் அனுமதி கிடைத்தவுடன் நூதன உத்யோக சம்பந்தமாக சேர்க்கப்படும் படியான கிராமங்களைப் பூற்றி ஜில்லா கெசட்டில் விளம்பரம்பரப்படுத்தி கிராமத்தையும் அதுவிஷயமாய் பறைசாற்றி அறிக்கையிட்டு நிலச்சுவான்தாருக்கும் ஓர் நகல் அளிக்

கவேண்டும். இவ்வித முறைகள் பூர்த்தியானகாலத்திலிருந்து 6-வாரங்களுள் நிலச்சுவான்தார் தனகிஷ்டமான புள்ளியைப்பற்றி சிபார்சுமிமோ எழுதியனுப்பவேண்டும். இந்தக்கேசில் நிலச்சுவான்தார் 15-9-14-ல் தாசில்தாரிடமிருந்து வந்த நோட்டீஸைகண்டு 9-10-14-ல் அதாவது 6 வாரத்துக்குள்ளாகவே சிபார்சுமிமோ எழுதியனுப்பித்திருக்கிறார். அதில் 1-ம் பிரதிவாதியின்பெயர் குறிப்பிட்டிருக்கிறது 7-11-14-ல் ஜில்லாகலெக்டரவர்கள் சட்டமுறைப்படி நிலச்சுவான்தாருக்கு ஒருநோட்டீஸ் அனுப்பியிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. தாசில்தார் அநுப்பிய நோட்டீஸாவது பிந்தி ஜில்லா கலெக்டர்அனுப்பிய நோட்டீஸாவது இந்தக்கேசில் ரிக்கார்டாகவில்லை. பிந்திய நோட்டீஸ் வந்தபிறகு நிலச்சுவான்தார் முந்தியசிபார்சு மிமோவை காயப்படுத்தி தாமே கையொப்பமிட்டு மறு மிமோவும் அனுப்பியிருக்கின்றார் என்று தலைப்பில் சொல்லியிருக்கிறது.

முதல் மிமோவில் எஜண்டு கையொப்பமிட்டது பிசகென்றும் டிப்டிகலெக்டர் ஆபீசுக்கு கிராம உத்யோகமாறுதல் களைப்பற்றி நோட்டீஸ் கொடுக்கவேண்டிய அதிகாரமும் கிடையாதென்றும் சொல்லி டிப்டிகலெக்டரவர்கள் நிலச்சுவான்தாரால் முதலனுப்பப்பட்டிருந்த சிபாரிசு மிமோவை நிஷ்பிரயோஜனமென்று அவமதித்திருக்கிறார்கள். 1900. வருஷத்திய IV ஆக்ட் 1 வது பிரிவையும் 1894-ம் வருஷத்திய II ஆக்ட் (15) வது பிரிவையும் அதாரிடியாய் சொல்லியிருக்கிறார்கள். IV ஆக்ட் 1 வது பிரிவானது 1911- வருஷத்திய VI ஆக்ட் 2வது பிரிவால் எடுபட்டுபோய்விட்டதென்று சொல்லலாம் என்றாலும் ருஜூ அம்சத்தை கவனித்தால் 1-ம் பிரதிவாதிகள் நியமனத்தையே நிலச்சுவான்தார் அபேக்ஷித்திருந்ததாகவும் எஜண்டு தன்னிஷ்டப்படி அவரை சிபார்சுசெய்ததல்லவென்றும் துலங்குகிறது எஜமானுக்காகவென்று எஜண்டு கையொப்பமிட்டிருப்பதால் எஜமான் சிபார்சுசெய்த பேர்வழியைப்பற்றி எஜண்டு சிபார்சு மிமோவில் குறித்தெழுதி தெரிவித்து இருக்கிற நடவடிக்கையானது எஜண்டின் சொந்தநடவடிக்கை அல்லவென்றும் சொல்லவேண்டும். டிப்டிகலெக்டர் அது விஷயமாய் சந்தேகப்பட்டிருந்தால் அதைப்பற்றி விசாரணை செய்திருக்கலாம் என்றாலும் எஜமான் கையொப்பமில்லாத காரணத்தால் முதல் மிமோவை தள்ளுபடிசெய்வது சரியல்லவென்றே சொல்லவேண்டும்.

2-வது மிமோவில் முதல் மிமோவை பிரஸ்தாபித்து அதையே காயப்படுத்தியிருப்பதால் நிலச்சுவான்தார் முதல் மிமோவை நிஷ்பிரயோஜனமென்றெண்ணி அதற்கு பதிலாக 2 வது மிமோவை எழுதினதாக நிதானிக்கக்கூடாது.

தாசில்தாரவர்கள் அநுப்பிய நோட்டீஸ் சரியானதல்லவென்றும் சட்டமுறையை அநுசரித்ததல்லவென்றும் ஆகவே அதன்பேரில் ஏற்பட்டசிபார்சு மிமோவும் பிரயோஜனமில்லையென்றும் வாதிக்கப்பட்டது. 7-11-4-ல் ஜில்லா கலெக்டர் அனுப்பிய நோட்டீஸையே சரியானதென்று வைத்துக்கொண்டபோதிலும் அதற்கு முந்தியே நிலச்சுவான்தார் சிபார்சு மிமோ எழுதியநுப்பியதை அதிகாரிகள் மறுதளிக்காமலும் வைத்துக் கொண்டிருந்தமையால் சரியான நோட்டீஸ் வந்தகாலத்தில் கோர்ட்டில் வைத்திருக்கிற ஷை சிபார்சு மிமோவை ஏற்றுக்கொண்டு அதன்பிரகாரம் நியமன உத்திரவளிக்கலாம். பின்னால் வரக்கூடிய யாதொரு உத்யோக ஏற்பாடை எதிர்பார்த்து நிலச்சுவான்தார் முன்னதாகவே யாதொரு சிபார்சு மிமோ எழுதியனுப்பலாம். பின்னால் அதாவது நோட்டீஸ்வந்தபிறகு புள்ளியை மாற்றவும்கூடும். ஆனால் இந்தக்கேசில் நிலச்சுவான்தார் மாற்றவில்லை முதல்சிபார்சுசெய்த பேர்வழியையே கலெக்டருடைய நோட்டீஸ்வந்தபிறகும் பிந்திய மிமோவில் குறித்தெழுதியிருக்கிறார்கள் ஆகவே 1-ம் பிரதிவாதியின் சிபார்சு மிமோ சரியானதென்று யோசிக்கவேண்டிய தாகையாலும் சட்டமுறையை அனுசரித்துச் செய்யப்பட்டிருப்பதாலும் வாய்தாவுக்குள் தாகலானதாலும் டிப்டிகலெக்டரவர்கள் அதில் கண்டபேர்வழியை நியமனம் செய்திருக்கவேண்டும் வாதியைநியமனம் செய்தது ஒழுங்கல்ல வாதியின் தாவா தள்ளுபடியாக வேண்டியது ஞாயமே இத்தியாதி காரணங்களை சொல்லி ஹைகோர்ட்டார் 2வது அப்பீலில் 1-ம் பிரதிவாதிக்கனுகூலமாய் தீர்ப்பளித்து கீழ்கோர்ட் தீர்மானங்களை ரத்துசெய்துவிட்டார்கள் 38 M. L. J. 126.

பேக்வல் & ஆட்ஜர்ஸ்-J. J.

(செங்கல்பட்டுஜில்லா)

S. A. 171 of 1919-27 அக்டோபர் 1919

அய்யாசாமி முதலியார் vs அப்பண்டைநயினார்.

கூட்டுபங்காளிக்குள் தகரார் ஏற்பட்டு வழக்கைத் தீர்க்கும் பொருட்டு இருதாரத்தாரும் 7 மத்தியஸ்தர்களை நியமித்து அவர்களுடைய அவார்டின்படி கட்டுப்படுவதாக முச்சலிக்கை எழுதிக்கொடுத்தார்கள் எழில் ஐவர்கள்மட்டும் கையொப்பமிட்டு கொடுத்த அவார்டை கோர்ட்டில் தாகல்செய்து அதன்படி டிக்கிரி

9-10-ம் பிரதிகளின்

பொருளடக்கம்.

I. பாகவியாஜ்ஜியத்தில் சம்பந்தப்பட்ட சொத்தின் சுவாதீனத்திலிருக்கிற வாதி தாகல் செய்த பிராதுக்கு கோர்ட்பீஸ் ஆக்டு 7 (V) பிரிவின்படி தீர்வையின் பேரில் மவுண்டு கட்ட வேண்டியதில்லை. 11-வது ஷெடியூல் 17 (6)-வது பிரிவின்படி 10 ரூ. ஸ்டாம்புகட்டி தாவா செய்யலாம். 157

II. அடமான சொத்துக்களில் சில அயிடங்களை விலக்கிவிட்டு மிகுதியின்பேரில் மட்டும் டிக்கிரிபெற்று அவைகளை ஏலம் போட்டு வசூலித்ததுகை போக மிகுதியான டிக்கிரிபாக்கிக்காக வெண்ணலை டிக்கிரியடையத்தகாது 157

III. கிரிமினல் புரொஸிஜர் கோடு 103-வது பிரிவின்படி ஆப்காரி இன்ஸ்பெக்டருக்குச் சோதனைகாலத்தில் சகாயம் புரிய மறுத்த கிராமத்தார்களை இ. பி. கோ. 187-வது பிரிவின்படி குற்றவாளிகளென தீர்மானிக்கப்பட்டது 159

IV. விக்கிரய உடன்படிக்கையின் பிறகு வெண்ணலை டிக்கிரிதாரன் அதே சொத்தை ஏல விக்கிரயம் பெற்றபின் உடன்படிக்கையை நிறைவேற்றக் கோரினவாதி, ஏல விக்கிரய தாரனைப் பார்ட்டியாகச் சேர்த்தகாலத்தில் 3-வருஷவாய்தா கடந்தபோதிலும் விக்கிரய உடன்படிக்கையின் தகவல் தெரிந்து எதிரி ஏலவிக்கிரயம் பெற்றதால் வாதிக்கு ஷையான் பேரிலும் இதே தாவாவில் டிக்கிரியளிக்கலாம் 159

V. மதராஸ் ஸிடிமுனிஸிபல் ஆக்டு 366-வது பிரிவின்படி கொடுக்கப்பட்ட கோட்டீஸுக்குக் கீழ்படியாத எதிரியை இ. பி. கோ, 26 -வது பிரிவின் குற்றத்திற்காக தண்டனை செய்த மாஜிஸ்டிரேட்டாருடைய தீர்மானத்தை ஹைகோர்ட்டார் ரிவிஷனில் தள்ளுபடி செய்த சந்தர்ப்பங்கள் 161

VI. லைஸன்ஸ் பெற்ற மரதொட்டிக்காரர் சேர்த்துவைத்துக்கொண்ட மரத்தை மூடி வைக்கும் பொருட்டு கொட்டகை போட்டுக்கொள்ள வேறு லைஸன்ஸ் வாங்கிக்கொள்ள வேண்டும் 161

VII. ஸ்வீகாரத்திற்குப்பின் ஜனித்த ஔரஸபுத்திரனும் ஸ்வீகாரபுத்திரனும் சேர்ந்து பாகவியாஜ்ஜியம் செய்ததில் ஸ்வீகாரபுத்திரனுக்குக் குடும்ப சொத்தில் ஒன்பதிலொருபாகம் தானுண்டென்று தீர்மானிக்கப்பட்டது 165

VIII. சாராயகடை லைஸன்ஸ்தார் ஜில்லா கலக்டருடைய அனுமதியுன்னியில் சேர்த்துக்கொண்ட பங்காளியின் மீதும் ஷை வியாபார விஷயமாய்க் கடன் கொடுத்த வாதி ஜாயிண்டாக டிக்கிரியடையத்தகாது 168

IX. கடனாளியின் பொறுப்பை வாதி விலக்கிவிட்ட காரணத்தால் கடனுக்காக ஜாமீன் கொடுத்திருந்தவரின் பொறுப்பும் நீங்கிவிடுமென்ற காண்டிராக்டு ஆக்டின் நியாயம் இந்தக்கேஸின் சந்தர்ப்பத்தில் பிரயோகிக்கத்தகாதென்று சொல்லப்பட்டது ... 170

X. மரண பண்டில் சேர்ந்தகாலத்தில் ஏற்பட்டிராத நூதனமான ஒரு முறையைப் பற்றி பாலிஸி பெற்றவருக்குத் தெரியபடுத்தாதபடியால் அம்முறைக்கு ஷை யார் கட்டுப்படவேண்டியதில்லை யென்ற தீர்மானம். 178

XI. மதராஸ் (Proprietory Estates Village service Act) நூதனமாய் கிராம உத்தியோக நியமன விஷயமாய் நிலச்சுவான்தார்கள் நபர்களை சிபார்சி செய்ய வேண்டிய முறையும் அதைப்பற்றி ரெவினியூ அதிகாரிகள் தலையிடக் கூடிய சந்தர்ப்பங்களும். 179

N B—உபன்னியாசம் தொடர்ச்சி 176

தென் இந்திய வியவகார சிந்தாமணி.

மாதப்பிரசுரம்—வருஷ சந்தா ... ... ரூ. 5 0 0

1913ஞ் ஜூலைமீ முதல் பிரசுரிக்கப்பட்டு பூர்த்தியாகியிருக்கிற மூன்று வாலியூம்களும் அட்டவணையுடன் பயிண்டான புஸ்தகம் (1200-பக்கமுள்ளது) தபாற்கூலியுள்பட ... ... ரூ. 7 8 0

என். சுப்பிரமணிய அய்யர்.

தமிழ்-லா ஜர்னல் ஆபீஸ், வேப்பேரி, சென்னை.

TO LET